Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-20 | 05-09-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -200

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10149) T.P: 024-222 4247



# பேச்சுவார்த்தையை எவ்வாறு முன்னெடுப்பது?

# கட்சிகள், அமைப்புகளுடன் கலந்துரையாடல்

## இருவாரங்களில் நடக்கும் என்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து அனைத்துக் கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் இரண்டு வாரங்களில் கலந்துரையாடல்களை நடத்தப்போவதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். தனது தந்தையாரான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 53 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்; விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை



மேசைக்கு கொண்டு வர தான் ஆவலாக உள்ளதாகவும் கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் " அனைத்து சமூகங்களும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பெருமளவான மாணவர்கள், ஆர்வலர்கள் விவசாயக் கண்காட்சிக்கு வருகை

மாபெரும் பொருண்மிய விவசாயக் கண்காட்சி நேற்று நான்காவது நாளாக வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் நடைபெற்றது.

நேற்றுக்காலை தமிழீழ தேசியக்கொடியினை மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் முல்லைவீரன் ஏற்றிவைக்க, அகவணக்கத்துடன் ஆரம்பமான இக் கண்காட்சியை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய பாடசாலை மாணவர்கள், கமக்கார அமைப்பினர், விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோர் பெருமளவில் கலந்து பார்வையிட்டுச் சென்றமையினை காணக்கூடியதாகவிருந்தது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம், கால்நடைஅபிவிருத்தித் திணைக்களம், யாழ்பல்கலைக் கழக விவசாயப்பீடம், ,நீர்ப்பாசனத்திணைக்களம் 'நவீன வேளாண்சேவை' தொழில்துறைநிறுவனங்கள் இணைந்து மேற்படி கண்காட்சியினை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

## போர் அரக்கன் சூழ்ந்துகொள்வானோ என்ற பயம் இன்றைய சூழலில் ஏற்படுகின்றது

### அமைதிப்பேரணியில் மன்னார் ஆயர் தெரிவிப்பு

(செட்டிகுளம்)

இன்று நாட்டில் இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கின்ற போது போர் என்ற அரக்கன் சூழ்ந்து கொள்வானா? என்ற பயம் ஏற்பட்டுள்ளது. அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சமாதானம் ஒன்று ஏற்படுவது இன்றியமையாத ஒன்று என்று வவுனியாவில் நேற்று மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் தெரிவித்தார். இலங்கை முழுவதிலும் இருந்து கத்ததோலிக்க இளைஞா

(12 ஆம் பக்கம் பார்க்க)




## மாபெரும் விவசாயக் கண்காட்சி இன்றும் நடைபெறுகின்றது

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சியில் நடைபெற்று வரும் பொருண்மிய விவசாயக் கண்காட்சியானது, மாணவர்கள், விவசாயிகள் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இன்றுகாலை 8.00மணி முதல் பிற்பகல் 4.00மணிவரை மேற்படி கண்காட்சி இடம்பெறவுள்ளதென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவினரும் தெரிவித்துள்ளனர். (சோ,கு)

## கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வள்ளம் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல்

### போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையீடு

(முல்லைத்தீவு)

கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு மாத்தளன் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வள்ளம் சிறிலங்கா கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளானமை குறித்து முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புகுழுத் தலைவருக்குக் கடிதம் மூலம் முறையீடு செய்துள்ளது.

இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அல்வாய்ப் பகுதியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இடம்பெயர்ந்து மாத்தளன் பகுதியில் வசித்து தொழில் புரிந்துவரும் அந்தோனிப்பிள்ளை-டானியல் என்பவருடைய32 அடி நீளங்கொண்ட வள்ளத்தில் வலிச்சல் தொழிலுக்காக மு.தவராசா, ஆ.அருள், டா.தேவகுமார், அ.டேவீசன் ஆகிய தொழிலாளிகள் 2004.09.01 ஆம் திகதி மாலை 3.00மணிக்கு தொழிலுக்குச் சென்றுள்ளார்கள்.

தொழிலுக்குச் சென்றுகொண்டிருக்கையில் 15

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தமிழின உயிர்க்கொலை நாள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுகோள்

தமிழின உயிர்க்கொலை தினமான இன்றைய தினத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் பொது அமைப்புக்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது. இன்று வர்த்தக நிலையங்களைப் பூட்டி மற்றும் வாகனப் போக்குவரத்துக்களை நிறுத்தி உயிர்க்கொலை நாளை துக்கநாளாக அனுஷ்டிக்குமாறு

12 ஆம் பக்கம் பார்க்க)



## எமது மக்கள் சிறப்பாக வாழ்ந்தால் மட்டுமே போராட்டத்தின் இலக்கை இலகுவாக அடைய முடியும்

### ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்க கட்டடத் திறப்பில் கேணல் சூசை

எமது மக்கள் சிறப்பாக வாழ்ந்தால் மட்டுமே போராட்டத்தினுடைய இலக்கை அடைய இலகுவாக இருக்கும்.

இவ்வாறு நேற்று மருதங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க கட்டடத்தைத் திறந்துவைத்த பின் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் உரையாற்றும் போதுதெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடமராட்சி கிழக்கை இராணுவப்பிடியிலிருந்து மீட்ட பின்னர் இப்பகுதியைப் படிப்படியாகக் கட்டியெழுப்பக் கூடிய எங்களால் ஆன உதவிகளைச் செய்துவருகிறோம். இதற்காகவே வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் பகுதி எனப்படும் ஓர் அபிவிருத்திப் பகுதி கடற்புலிகளின் அனுசரணையோடு இயங்கி வருகின்றது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மக்கள் சிறப்பாக வாழ்ந்தால்தான் எமது போராட்டத்தினுடைய இலக்கை அடைவதற்கு மிகவும் இலகுவாக இருக்கும். எமது போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் குறிப்பாக 1984 ஆம்ஆண்டு வடமராட்சி கிழக்கும் செயற்பாடுகளும் என மிக நெருக்கமாகப் பின்னிப்பிணைந்து காணப்பட்டது. அந்தளவுக்கு எமது செயற்பாட்டைச் செய்வதற்கு இப்பகுதி மக்கள் அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்கினார்கள். அத்தோடு இப்பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் வருகை தருகின்ற அதிகாரிகளையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# மாணவியின் செயற்பாட்டில் எந்தவித நியாயத்தன்மையுமில்லை

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ்

யாழ் மருத்துவபீட மாணவி புஸ்பமாலாவின் பிரச்சினைகள் தொடர்பாக ஊடகத் துறையினருக்கு விளக்கமளிப்பதற்கான பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம்மாலை 3.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இச் சந்திப்பில் மாணவியின் பிரச்சினை தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் பேராசிரியர் கந்தசாமி, சிரேஷ்ட மாணவ ஆலோசகர் புஸ்பரெட்ணம், பதில் பதிவாளர் திருமதி சிவனேஸ்வரன். ஜெயக்குமார், சந்திரசேகரன், மருத்துவபீட பீடாதிபதி கலாநிதி சிவபாலன், கலைப்பீடபீடாதிபதி ஆர்.சிவச்சந்திரன்,யாழ் பல்கலைக் கழக மாணவ ஒன்றியத்தலைவர் எஸ்.செல்வகுமார், அனைத்துப் பீடங்களின் மாணவ ஒன்றியத் தலைவர்கள் கலந்துகொண்டனர். இச்சந்திப்பில் கருத்துரை வழங்கிய துணைவேந்தர் மோகனதாஸ் மாணவிபுஸ்பமாலாவின் விடயம்தொடர்பாக சரியான விளக்கத்தை பொது மக்களுக்கு வழங்கவேண்டியுள்ளது. 1998 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரண்டாம் ஆண்டு மருத்துவ பீடப் பரீட்சையில் சித்தியெய்தவில்லை. அதனைத் தொடர்ந்து 98 நவம்பர் இம்மாணவி எழுதிய மீள் பரீட்சையில் சுகவீனம் காரணமென்றும் மருத்துவச் சான்றிதழ் தந்து பரீட்சை எழுதவில்லை. 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சைக்கு விண்ணப்பிக்கவில்லை. 1999 நவம்பர் நடைபெற்ற மீள் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சை எழுதவில்லை. இதனால் இது ஒரு தடவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2000 ஆம் ஆண்டு ஜுலை மாதம்இடம்பெற்ற பரீட்சைக்கு விண்ணப்பித்து ஒரு பாடம் மட்டும் எழுதினார். மற்றையபாடம் எழுதவில்லை. எழுதாமைக்கு எந்தக்காரணமும் முன்வைக்கவில்லை. அதனைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் இடம்பெற்ற மீள் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையவில்லை. அதனைத்தொடர்ந்து 2001 ஆண்டு ஜுலை மாதம் பரீட்சைக்குத் தோற்றிசித்தியெய்தவில்லை. இது இவரது ஐந்தாவது தடவை. மருத்துவபீடத்தைப் பொறுத்தமட்டில் ஒரு மாணவனுக்கு நான்கு தடவைகள் மட்டுமே வழங்கப்படும். மேலதிகமாக ஒரு தடவை மூதவையின் தீர்மானத்திற்கிணங்க வழங்கப்படும். இதனடிப்படையில் 2003 ஆம் ஆண்டு மே மாதம் மேலதிகமாக ஒரு பரீட்சைக்குத் தோற்ற பீடசபை குழு அனுமதி அளித்து ஒரு தடவை வழங்கப்பட்டது. அதிலும்சித்தியடையவில்லை. இது இவரது ஆறாவது தடவை இதற்குமேலாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டு மருத்துவபீடாதிபதி அதற்கு முகம்கொடுத்து மேலதிகமாக இன்னமும் ஒரு தடவை வழங்கப்பட்டது. இதன் பிறகு மாணவி தான் பாதிக்கப்பட்டதாகக் கூறி உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்தார். இப்போராட்டம் மாணவர் ஒன்றியம்தலையிட்டு ஒரு முடிவிற்குக் கொண்டு வந்தது. அதன்போது மாணவியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணக்கம் காணப்பட்டது. இதன் போது மாணவி கேட்ட கோரிக்கை ஒன்று தனது விடைத்தாள் வேறு ஒரு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி மீள்திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். நாம்அதற்கு இணங்க மீள்திருததத்திற்கு அனுப்ப முற்பட்டபோது அம் மாணவி அனுப்பவேண்டாம் என கடிதமூலம் அறிவித்துள்ளார். இதற்குப்பிறகு 2 ஆம் திகதி தொடக்கம் தீர்வுகாணும்வரை தான் பல்கலைகழகத்தை விட்டு போக மாட்டேன் எனக் கூறி அங்கேயே உள்ளார். இதற்குப் பிறகு மாணவி இப்படிச் செய்வதில் என்ன நியாயத்தன்மை உள்ளது எனக் கேள்வி எழுப்பினார். இதில் கருத்துரை வழங்கிய மருத்துவப்பீட பீடாதிபதி கலாநிதி சிவபாலன் எமது பீடத்தைச் சேர்ந்த ஒரு மாணவியின் பரீட்சை விடைத்தாளை வேறு ஒரு பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி மீள் திருத்தம் மேற்கொள்வது எமது விரிவுரையாளர்களை மனம் நோகச் செய்யும் நடவடிக்கையாக இருந்தபோதும் நாம் அதற்கு இணங்கினோம் என குறிப்பிட்டார். இதில் கருத்துரை வழங்கிய மாணவ ஒன்றியத் தலைவர் செல்வகுமார் மாணவி புஸ்பமாலா,மாணவ ஒன்றியத்தின் கட்டுப்பாடுகளுக்கு மீறி செயற்பட்டுள்ளார். இதனால் மாணவ ஒன்றியம் இனி இவரது செயற்பாடுகளில் தலையிடமாட்டாது என குறிப்பிட்டார். (36)

### பாடசாலைக்கு முன்பாக வீழ்ந்த மரம் அகற்றப்படவில்லை

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு முன்பாக மரம் ஒன்று இரண்டு மாத காலமாக வீழ்ந்து கிடக்கின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இதனை அகற்ற இதுவரை நடவடிக்கை எடுக்காததால் இரவு வேளைகளில் விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன. எனவே இம் மரத்தை அகற்றுமாறு பொதுமக்கள் வேண்டியுள்ளனர். (15)

### ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறியில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கலந்துரையாடல்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறிக்கான நேர்முகத் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் 07.09.2004 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு சர்வதேச. தமிழீழ மாணவர்பேரவைக்கேட்போர் கூடத்தில் நடைபெறும். இக் கலந்துரையாடலில் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சித்தியடைந்த மாணவர்களின் விபரம் பின்வருமாறு:-

நடராஜ் பஞ்சசீலன் (அச்சுவேலி), சசிகரன் ரேணுகா (யாழ்ப்பாணம்), செல்லத்துரை பிரதீபன் (கிளிநொச்சி), சாந்தநாயகி பொன்னம்பலம் (கொக்குவில்), வைதேகி சிவஞானம் (கொக்குவில்), கலைவாணிகந்தசாமி (சாவகச்சேரி), துஷ்யந்தினி தர்மராஜா (சுன்னாகம்), ஜமுனாமலர் சந்திரசேகரம் (உரும்பிராய்), கலைத்தேவி பொன்னையா (முல்லைத்தீவு), சுகந்தினி சுப்பிரமணியம் (கொக்குவில்), ஆரணி பூபாலசிங்கம்(நீர்வேலி), குணவதனி பரம்சோதி(கரவெட்டி), தங்கவடிவேல் சிவாஸ்கரன்(பரந்தன்), கவிதா சிவபாதம் (யாழ்ப்பாணம்), ஞானப்பிரகாசம் அன்ரனி தவச்செல்வம் (யாழ்ப்பாணம்), வேலும்மயிலும் கோபிராஜ (புலோலி), அருள்மொழி சுப்பிரமணியம்(முல்லைத்தீவு), தில்லையம்பலம் கிருஷ்ணரூபன்(யாழ்ப்பாணம்), பிரவீணா சிவஞானசுந்தரம் (சுன்னாகம்), சுதந்திரன் சுதர்சினி(தாழையடி), கோமதி சுந்தரலிங்கம்(சுன்னாகம்), ஜமுத்திரா தர்மலிங்கம் (கிளிநொச்சி), கதிரவேலு டேகீஸ்வரராசன்(திருநெல்வேலி), லவநிசாசெல்வநாயகம் (யாழ்ப்பாணம்), குமாரசாமி மேனகா (கொக்குவில்), யுசெந்தி பாலபரமேஸ்வரன்(உரும்பிராய்).


# சாவு அறிவித்தல்

## சின்னத்தம்பி வியாளம்மா

புதுக்குடியிருப்பு 07 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி வியாளம்மா அவர்கள் 04.09.2004 அன்று சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற காசிப்பிள்ளை அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும; அமரர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும்; காலஞ்சென்றவர்களான; வல்லிபுரம், வேலுப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, தம்பிப்பிள்ளை (முன்னாள் கிராம சேவையாளரும் சமாதான நீதவானும்), நவரத்தினம் மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்; வேதாரணியம், நல்லையா, சுப்பிரமணியம் (கிராம சேவையாளர் புதுக்குடியிருப்பு மேற்கு) கலாராசா, சந்திரா தேவி, வீரசிங்கம், தர்மலிங்கம் (இலங்கை போக்கு வரத்துச் சபை மன்னார்), பவானி தேவி,கனகாம்பிகை (லண்டன்), சாந்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும்; மார்க்கண்டு, காலஞ்சென்ற வீரசிங்கம், A.விக்கினேஸ்வரராஜா (லண்டன்), மகேஸ்வரி, மோகனலட்சுமி, சிவபாக்கியம், பசுபதி, கஞ்சனாதேவி, மல்லிகா தேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 05.09.04 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெற்று, புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு அன்னாரின் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:-
**வேதாரணியம் (மகன்),**
**7ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு.**

(சி.9191)



## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

செல்லத்துரை சிவந்தகுமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல 820075870v) 02.09.2004 அன்று புளியங்குளத்திற்கும் நெடுங்கேணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுகொள்கின்றேன். (4689)

### வாடகைக்கு அறை

தனியார் நிறுவனமொன்றில் வேலைபார்க்கும் ஆண் ஒருவருக்கு நீர், மின்சார வசதி யுடன் கூடிய தங்குமிடம் தேவைப்படுகிறது. கந்தசாமிகோவில் அருகாமை விரும்பத்தக்கது. வசதியைப் பொறுத்து வாடகைபேசித்தீர்க்கலாம். தொடர்புக்கான முகவரி, விளம்பர இல.71 ஈழநாதம் யாழ். சாலை, கிளிநொச்சி. 15.09.2004 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். (5017)


# கிளிநொச்சியில் சிறப்புற நடைபெற்ற புலிகளின்குரல் முத்தமிழ் கலையரங்கம்

(அலுவலக செய்தியாளர்)

புலிகளின் குரல் நிறுவனத்தினரால் நடாத்தப்படும் முத்தமிழ் கலையரங்க நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார் தொடர்ந்து புலிகளின்குரல் அறிவிப்பாளரான



பொன்.காந்தன் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வுகளில் மாணவி சுகன்யாவின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அடுத்து வரவேற்புரையினை புலிகளின் குரல்மேலாளர் ராஜேஸ்வரன் நிகழ்த்தினார்.

மாவீரர் வணக்க நடனத்தினை ஜெயச்சந்திர மூர்த்தி பிரின்சியா-வழங்கினார். காந்தி நிலைய மாணவர்களின் முகம் தெரியாத பூக்கள் நாடகநிகழ்வு நடைபெற்றதையடுத்து அறிமுக உரையினை புலிகளின் குரல் செய்தி ஆசிரியர் தி.தவபாலன் நிகழ்த்தினார். சிறப்புரையினை கலைஞரும் படைப்பாளியுமான சுபாஸ் பாலகணேசன் நிகழ்த்தினார். தொடர்ந்து போராளி வெற்றிச் செல்வியின் நெறியாள்கையில் புலிகளின் குரல் கலைஞர்களும் விடுதலைப்புலிகளின் மகளிர் கலைபண்பாட்டுக்கழக கலைஞர்களும் ஒன்றிணைந்து வழங்கிய'எப்போது' எனும் நாடகம் இடம்பெற்றது. அடுத்தநிழ்வாக நாடக நெறியாளர் பேபி ஆசிரியரின் நெறியாள்கையில் மகளிர் கலைபண்பாட்டுக் கழக கலைஞர்கள் வழங்கும் சங்கநாதம் நிகழ்வு நடைபெற்றது. அடுத்து நன்றியுரையினை கிளிநொச்சி வானொலிமன்ற செயலாளர் சுகன்யா நிகழ்த்தினார். இறுதி நிகழ்வாக யோசப்வாஸ் இளையோர் மன்றத்தினரின் சமூக நாடகம் இடம்பெற்றதனையடுத்து முத்தமிழ் கலையரங்க நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நிறைவுபெற்றன. (15)


# ஓராண்டு நினைவில்

மண்ணில் 04 - 09 - 1949



விண்ணில் 18 - 08 - 2003

## அமரர் பாலசிங்கம்

ஆண்டுத்திதி 05.09.2004. ஞாயிற்றுக்கிழமை

கண்ணுக்கினிய மருமகனாய்
அன்புக்கினிய கணவனாய்
பாசமிகு தந்தையாய்
பண்புமிகு சகோதரனாய்
மாண்புமிகு மாமனாய்
சோர்விலாத் தோழனாய்
உற்ற நண்பனாய்
உலகை மறைந்தாலும்
ஆண்டு ஒன்று சென்றாலும்

(4909)

குடும்பத்தினர்.

# ரஷ்ய அதிரடிப்படையினர்- தீவிரவாதிகள் கடும் சண்டை

# பணயக்கைதிகள் 300 பேர் பலி; 700பேருக்குக் காயம்

## ரஷ்யாவில் கோரச்சம்பவம் — உலகநாடுகள் கண்டனம்

(மொஸ்கோ)

**தீவிரவாதிகளால் ரஷ்யாவில் பாடசாலை ஒன்றில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த பள்ளிச்சிறுவர், சிறுமியர் பெற்றோரை மீட்க ரஷ்ய அதிரடிப்படையினர் தீவிரவாதிகளுடன் நடத்திய சண்டையின் போது 300 பேர் பலியாகியுள்ளதோடு 180 பள்ளிச்சிறுவர் சிறுமியர் உட்பட 700 பேர் காயமடைந்துள்ளனர்.**

தெற்கு ரஷ்யாவில் உள்ள செசன்யாவை தனி சுதந்திர நாடாக அறிவிக்கக் கோரி தீவிரவாதிகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இந்தக் கோரிக்கை உட்பட பல் வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பெஸ்லான் நகரில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளிக் கூடத்தை கடந்த புதன்கிழமை கைப் பற்றினார்கள். அன்றுதான், விடுமுறைக்குப்பிறகு பள்ளிக்கூடம் திறந்த முதல் நாளாகும். இதை யொட்டி நடைபெற்ற விழாவில் கலந்துகொள்வதற்காக ஏராளமான பெற்றோரும் பள்ளிக்கு வந்திருந் தனர்.

எனவே நூற்றுக்கணக்கான பள்ளிக்குழந்தைகளுடன் பொது மக்களும் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கிக்கொண்டனர். அவர்களை பணயக் கைதிகளாக தீவிரவாதிகள் பிடித்து வைத்துக்கொண்டனர். தீவிரவாதிகள் துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் தங்கள் உடலில் வெடிகுண்டு 'பெல்ட்''களையும் அணிந்திருந்தனர்.

இதனையடுத்து உடனடியாக இராணுவத்தினர் கவச வாகனங் களுடன் அந்தப் பள்ளிக்கூடத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டனர். முதல் நாளில் தீவிரவாதிகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 12பேர் பலியாகிவிட்டனர். தொடர்ந்து அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டால் உயிர்ச்சேதம் அதிக மாகிவிடும் என்று கருதியதால், அதிகாரிகள் தீவிரவாதிகளுடன் சமரசப்பேச்சு நடத்திவந்தனர்.

அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று, பெண்கள், குழந்தைகள் உட்பட 32 பேர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர். முதலில் 400பேர் வரைதான் உள்ளே இருப் பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் விடுதலையாகி வெளியே வந்தவர்கள் மூலம் ஆயிரத்திற்கும் அதிகமானோர் பணயக்கைதிகளாக இருப்பது தெரியவந்தது.

பணயக்கைதிகளாகாத அடைக் கப்பட்டுள்ள குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் உணவு எதுவும் கொண்டுசெல்ல தீவிர வாதிகள் அனும்தி மறுத்து விட்டனர். தண்ணீர் கூட அவர்க ளுக்கு வழங்கவில்லை. 3ஆவது நாளான நேற்று முன்தினம் அவர்க ளின் உடல் நிலை மோசம் அடைந் தது. பள்ளியில் உள்ள சிறிய உடற்பயிற்சி அரங்கில் பணயக கைதிகள் அடைத்து வைக்கப்பட்டி ருந்தனர். போதிய இடவசதி இல் லாததால் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் படுத்து இருந்தனர். அவர் களை சிறைப்பிடித்து வைத்துள்ள தீவிரவாதிகள் ஏறத்தாழ 40பேர் இருக்கலாம் என்றும் தெரிய வந்துள்ளது. அவர்களில் பலர் பெண்தீவிரவாதிகள்.

நேற்று முன்தினம் பள்ளிக்கூடத் தில் இருந்த தீவிரவாதிகள் இராணுவத்தினர் மீது வெடிகுண்டு களை வீசி தாக்கத் தொடங்கினார் கள். அப்போது சில குழந்தைகள் வெளியே தப்பியோடி வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல்அதிரடித் தாக்குதல் நடத்தி பள்ளிக்குழந்தைகளை மீட்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி இராணுவ கமாண்டோ வீரர்கள் பள்ளிக் கூடத்தின் ஒரு பக்க சுவரைத் தகர்த்து உள்ளே நுழைந்தனர்.

அப்போது உலங்கு வானூர் திகள் மேலே வட்டமிட்டபடி கண் காணித்தன. இரு தரப்பினரு க்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது.இந்தச் சந்தர்ப் பத்தைப்பயன்படுத்தி உள்ளே சிறைப்பட்டுக் கிடந்தவர்களில் பலர் வெளியே தப்பியோடிவந்தனர்.

இந்த அதிரடி நடவடிக்கையில் 700 பேர் காயம் அடைந்தனர் அவர் களில் 1៩0 பேர் குழந்தைகள். உடனடியாக அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டனர். 3நாட்களாக தண்ணீர் கூட குடிக்கா மல் இருந்தனர். இராணுவத்தினர் அதிரடி நடவடிக்கை தொடங்கிய தும் பல தீவிரவாதிகள் தப்பியோடி விட்டனர். பெண் தீவிரவாதிகள் தங்கள் சீருடைகளைக் களைந்து விட்டு சாதாரண உடையில் பணயக் கைதிகளோடு கலந்து வெளியே வந்து தப்யோடிவிட்டனர்.அப்போது அவர்கள் சில குழந்தைகளையும் தூக்கிச் சென்றதாகக் கூறப்படுகின் றது.

மீட்பு நடவடிக்கையின் போது பல குழந்தைகள் மேலாடை இன்றி இருந்ததைப் பார்க்க முடிந்தது. காயம் அடைந்த பல குழந்தை களை இராணுவத்தினர் தூக்கி வந்தனர். பல பெண்கள் தூக்குப் படுக்கை மூலம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட் டனர்.


மீட்பு நடவடிக்கை தொடங்கிய தும் முதலில் மூன்று முறை பல மான வெடிச்சத்தம் கேட்டது. தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதால் பட்டாசு வெடிப் பது போல் தொடர்ந்து வெடிச்சத்தம் கேட்டபடி இருந்தது.

இந்த அதிரடி நடவடிக்கையில் பள்ளிக்கூடத்தின் கூரைப்பகுதியும் இடிந்து விழுந்து விட்டது. தீவிர வாதிகளின் உடலில் கட்டியிருந்த குண்டுகள் வெடித்ததால் அது இடிந்து இருக்கலாம் என்று கருதப் படுகின்றது.


இராணுவத்தின் அதிரடி நடவடிக்கையில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இவர்களில் 10 பேர் அரேபியர்கள், துப்பாக்கிச சண்டையின் போது குறுக்கிட்ட பள்ளிக்குழந்தைகள் உட்பட 150பேர் பலியாகிவிட்டதாக முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. ஆனால் 300பேர் பலியாகிவிட்ட னர்.பள்ளிக்கூடம் மற்றும் அதைச் சுற்றிலும் கிடந்த 100க்கும் மேற்பட்ட பிணங்களைப் பார்த்ததாக செய்தி நிறுவன நிருபர்கள் தெரிவித்தனர். இதை அதிகாரிகள் யாரும் உறுதிசெய்யவில்லை.

உள்ளே அடைத்து வைக்கப் பட்டு இருந்த அனைவரும் வெளி யேற்றப்பட்டு விட்டதாகவும், பள்ளிக்கூடம் இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்ட தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோரச்சம்பவம் குறித்து அமெ ரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.



ரஷ்யாவில் பெஸ்லன் பள்ளியில் பணயக்கைதிகளாகப் பிடிக்கப் பட்டவர்களை மீட்ட ரஷ்சியப்படையினர் காயமடைந்த பொதுமகன் ஒருவரைப் பாதுகாப்பான இடத்திற்குக் காவிச் செல்கின்றனர்.



ரஷ்யாவில் பெஸ்லன் பள்ளியில் சிறை வைக்கப்பட்டு தீவிர வாதிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட குழந்தைகள் உயிர் பிழைத்த நிம்ம தியில் தண்ணீர் குடிக்கிறார்கள்.

## பிரெஞ்சு பணயக்கைதிகள் சன்னி தீவிரவாதிகளிடம் ஒப்படைப்பு

(பாக்தாத்)

ஈராக் தீவிரவாதிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட 2 பிரெஞ்சு நிருபர்கள் இருவரையும் சன்னி தீவிரவாதிகளிடம் கடத்தல்காரர்கள் ஒப்படைத்தனர்.

பிரெஞ்சு நிருபர்கள் கிறிஸ்டியன் செஸ்நாட், ஜார்ஜஸ் மால்புருனாட் ஆகியோர் செய்தி சேகரிப்பதற்காக ஈராக் சென்றனர். அவர்களைக் கடந்த 20 ஆம் திகதி 'இஸ்லாமிய இராணுவம்' என்ற அமைப்பைச் சேர்ந்த தீவிர வாதிகள் கடத்திச்சென்றனர். பிரான்சு நாட்டில் முஸ்லிம் மாணவிகள் 'பர்தா' அணிந்து கொண்டு பள்ளிக்கூடம் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடையை ரத்துச் செய்யவேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்.

இந்த நிபந்தனையை பிரான்ஸ் ஏற்க மறுத்துவிட்டது. கடந்த வியாழக்கிழமை இந்தத்தடை நடைமுறைக்கு வந்தது. பெரும்பாலான முஸ்லிம் மாணவிகள் 'பர்தா' அணியாமல் பள்ளிக்கூடம் வந்தனர். 70 முஸ்லிம் மாணவிகள் மட்டும் பர்தாவுடன் வந்தனர். பள்ளிக்கூட நிர் வாகிகள், சட்டத்தைச் சுட்டிக்காட்டி அவர்களைத் திருப்பி அனுப்பினர்.

இந்த நிலையில் பிரெஞ்சு நிருபர்களைக் கடத்திய 'இஸ்லாமிய இராணுவம்' என்ற தீவிரவாதிகள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தீவிரவாதிகள் பிரெஞ்சு நிருபர்களைத் தொடர்ந்து பணயக்கைதிகளாக வைத்திருக்க விரும்புகிறார்கள் 'இஸ்லாமிய இராணுவம்' குழுவில் உள்ள ஈராக்கியர்கள் பிரெஞ்சு நிருபர்களை விடுவிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். இதனை யடுத்தே இரு பணயக்கைதிகளையும் சன்னி தீவிரவாதிகளிடம் ஒப்படைத் துள்ளனர்.

## இருவர் பலி

(லண்டன்)

இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியில் விமானப்படை விமானம் ஒன்று பயிற்சிக்காகப் பறந்தபோது தரையில் வீழ்ந்து நொருங்கியது.


இதில் இருவர் பலியாகினர்

## ரைம்ஸ் பத்திரிகையின் ஆய்வில் சனாதிபதி புஷ்ஷிற்கு வெற்றி

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி தேர்தல் களத்தில் சனாதிபதி புஷ் சனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன்ஹரியை விடவும் முன்னணியில் உள்ளார்.

ரைம்ஸ் பத்திரிகை நடத்திய புதிய ஆய்வு "இன்று சனாதிபதி தேர்தல் நடத்தப்படுமானால் 52 சதவீத வாக்குகள் பெற்று புஷ் சனாதிபதி ஆவார்" என்று கூறியுள்ளது. ஜோன்ஹரிக்கு 41 சதவீத வாக்குகளே கிடைக்கும் என்று அந்த ஆய்வு கூறுகின்றது.



தமிழகத்தின் 150 ஆண்டுகால கனவுத் திட்டமான சேது கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படவுள்ள தீடைப்பகுதி.

## லெபனானிலுள்ள சிரியப்படை உடனடியாக வெளியேறவேண்டும்

### -ஐ.நா.பாதுகாப்புச்சபை அறிவுறுத்து

(நியூயோர்க்)

லெபனானின் சனாதிபதித் தேர்தலில் சிரியா தலையிட வேண்டாமென்றும், லெபனானி லுள்ள சிரியப்படையினரை உடன் வெளியேற்றுமாறும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை சிரியாவிற்கு அறிவுறுத்தி யுள்ளது.

இஸ்ரேல் அருகே உள்ள நாடு லெபனான்.அந்த நாட்டு அரசி யலில் சிரியா ஆதிக்கம் அதிகமுள் ளது. உள்நாட்டுப் போர் ஏற்பட்ட போது அதற்கு உதவுவதற்காக 17 ஆயிரம் சிரியத் துருப்புக்கள் லெபனானில் முகாமிட்டன .சிரியா ஆதரவு பெற்ற எமிலே லாகுட் சனாதிபதியாக இருந்து வருகிறார். அவரது 6 ஆண்டு ஆட்சிக்காலம் வருகிற நவம்பர் மாதத்துடன் முடி வடைகிறது.இதை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்க லெபனான் பாராளுமன்றம் சட்டத்திருத்தம் கொண்டுவர இருக்கிறது. இதன் மீது லெபனானின் 128 உறுப்பினர் கள் கொண்ட பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடக்க இருக்கிறது. இந்த நிலையில் ஐ.நா பாதுகாப்புச் சபையில் லெபனான் சனாதிபதித் தேர்தலில் சிரியா தலையிடக்கூடாது என்றும், லெபனானில் உள்ள சிரிய இராணுவம் திரும்பப் பெறப் படவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர் மானத்திற்கு ஆதரவாக 9 நாடுகள் வாக்குப்போட்டன. மொத்தம் உள்ள 15 உறுப்புநாடுகளில் 6 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்தத் தீர் மானத்தை அமெரிக்காவும், பிரான் சும் கொண்டுவந்தன. "சிரியத் துருப் புக்கள் எங்கள் நாட்டு அழைப்பின் பேரிலேயே எங்கள் நாட்டுக்கு வந்தன"என்று லெபனான்அதிகாரி முகமதுஈசா கூறினார். "லெப னானில் இஸ்ரேல் இராணுவம் இன்னும் முகாமிட்டிருக்கும் நிலை யில் சிரிய இராணுவம் வெளி யேறத் தேவையில்லை" என்றும் அவர் கூறினார்.

# இலங்கை ஒரே நாடாக இருப்பதா என்பதை தென்னிலங்கை சமூகமே தீர்மானிக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(செட்டிகுளம்)

**இலங்கை இரண்டாவதா அல்லது ஒரே நாடாக இருப்பதா என்று தென்னிலங்கை சமூகம் தான் தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூட்டம் ஒன்றில் எல்லேவல குணவன்ச தேரர் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.**

கடந்த காலப்போர் நடவடிக்கைகளின் போது வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் காணாமற் போதல், அகதிவாழ்வு, தமது பிரதேசத்தில் சுதந்திரமாக வாழமுடியாத நிலைமை, கைதுகள், தமிழ் மக்களின் பெறுமதிமிக்க உயிர்களைக் குண்டுத் தாக்குதல் மூலம் அழித்தமை, மதவழிபாட்டுத் தலங்கள் மீது குண்டுத் தாக்குதல், இப்படி எல்லாம் நடந்தேறின. இது இவ்வாறு இருக்கத் தென்னிலங்கையில் இருக்கின்ற அப்பாவி இளைஞர் யுவதிகளின் உயிர்கள் போனதைக் கூட கவனத்தில் எடுக்காது போர்ச் சூழலில் வாய்திறக்காமல் இருந்தோர் சமாதானச் சூழலில் சிங்கள மக்களின் மனங்களில் விசமத்தனமான இனவாதத்தைத் தூண்டுகிற வகையில் பேசுவதைத் தென்னிலங்கை தேரர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் ஆயுத முனையில் பலமாக இருக்காவிட்டால் இரண்டு வருடங்களாக இந்த சமாதான நிலை நிலைத்திருக்கமுடியாது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்பது பேச்சுவார்த்தையில் ஓர் அடிப்படையான நிலையே ஆகும். இந்த அதிகாரசபையை அறியாது இது சம்பந்தமான பேச்சுவார்த் தையை வாதிடக்கூட மறுக்கும் ஜே.வி.பி ,ஹெல உறுமய, தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் இடைக்கால நிர்வாக தன்னாட்சி அரசை, நாட்டை பிரிக்கின்ற ஒரு வடிவம் என்று கூறுகிறது. இது முற்றிலும் தவறான ஒன்று. ஒருநாடு இரண்டாக பிரிவதுதான் பிரிவினைக்கு அர்த்தம். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வினைக் கேட்டு நிற்கின்ற தமிழ்ச் சமூகம் இடைக்கால தன்னாட்சியைக் கோருவதை ஏன் தென்னிலங்கை சமூகம் இனவாதமாகப் பார்க்கிறது.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை எதிர்பார்த்து இருக்கின்ற எமது மக்களுக்கு அரசியல் இலாபங்களுக்காக அது தவறு. நாடு பிளவுபட்டால்தான் தீர்வு உண்டு என்பதை உணர்த்திக்கொண்டு இருக்கின்ற தென்னிலங்கை இனவாத சக்திகளுக்கு இலங்கைத்தீவு இரண்டு நாடாகப் பிரிக்கப்படுவதுதான் உங்களுடைய விருப்பமாக இருந்தால் அதற்கு தமிழ்ச் சமூகம் தயாராகவே இருக்கின்றது. இதனைத் தீர்மானிக்க வேண்டியது உங்கள் கையில் தான் உள்ளது என்று செல்வம் அடைக்கலநாதன் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (21)

## நீரின்றி அவலம்

மன்னாருக்கு நீர் வழங்கும் பௌசர்கள் ஓலைத்தொடுவாய், தோட்டாவளி கிராமக் கிணறுகளை நாடிச் செல்கின்றன. ஏற்கனவே நீர் பெற்ற கிணறுகள் வற்றியதையடுத்தே 10 மைல்களுக்கு அப்பாலுள்ள பகுதிகளுக்கு இவை செல்கின்றன. (மி)




வவுனியா வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்குத் தலைமைக் கிளையான நெடுங்கேணி கமநலசேவை நிலையம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:-. சோதி, வரன்)

## அரசியல் கைதிகளுடன் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். மட்டக்களப்பு சிறைச்சாலையில் 14 ஆண் கைதிகளும், 04 பெண்கைதிகளும், தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாகவும் இவர்களின் விபரங்களை தான் பெற்று இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். சிறைச்சாலைக் காரியாலயத்தில் இடம் பெற்ற இந்த சந்திப்பில் அரசியல் கைதிகளின் மனோநிலையை தான் கேட்டு அறிந்ததாகவும் இவர்களின் விடுதலை தொடர்பாக தன்னால் முடிந்த நடவடிக்கையினை தான் எடுப்பதாக உறுதியளித்ததாகவும் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார். மேற்படி சிறைக் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்திக் கடந்தவாரம் உண்ணாவிரதம் மேற்கொண்டு இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரதேச செயலர்கள் புதிதாக நியமனம்

முல்லை மாவட்டத்தில் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் புதிதாக இலங்கை நிர்வாகசேவையிலிருந்து பிரதேச செயலர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். கரைதுறைப்பற்று பிரதேச செயலராக அம்பலவாணர்- சோதிநாதன் ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலராக செல்வி.கந்தையா சுபாஜினி, மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ, துணுக்காய் பிரதேச செயலாராக நாகலிங்கம். நந்தகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் முல்லை மாவட்ட அரச அதிபர் செயலகத்திலும் இரண்டு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். முல்லை மாவட்ட அரச அதிபர் செயலக புனர்வாழ்வுக்கிளை திட்டப் பணிப்பாளராக செல்லத்துரை பிரணவநாதன், உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரியாக (கச்சேரிக்காக) செல்வி பரமசாமி ஆரணி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (20)

# பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அன்பு தையலகம் திறப்பு



தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடனும், ஆசியாவிற்கான யப்பான் பாலம் (BAJ) நிறுவனத்தின் நிதியுதவியுடனும் ஆரோக்கியபுரம் அக்கராயன் குளத்தில் அண்மையில் அன்பு தையலகம் திறந்து வைக்கப் பட்டது.

படித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கப் போகும் இந்நிறுவனம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நடத்தப் படும் அன்பு பேசாக்கு நிலையத்திற்கு அனுசரணையாக இருக்கும். மேற்படி நிறுவனத்தின் பெயர்ப் பலகையினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்தின் நிர் வாகப் பொறுப்பாளர் எஸ்.வின் சென்ற் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் நாடாவை வெட்டிக் கட்டடத்தை திறந்துவைத்தார்.

வைபவத்தில் ஆரோக்கியபுரம் மாதர் முன்னேற்றச்சங்கப் பொறுப்பாளர், அக்கராயன் அரசியல் துறைப்பொறுப்பாளர், கமநல சேவை நிலைய எழுதுவினைஞர் ஆகியோர் உரையாற்றினர்.

# பூநகரி ம.வி. பழையமாணவனால் சூரியமின்கலத் தொகுதி அன்பளிப்பு

(பூநகரி)

பூநகரி ம.வி.இன் பழைய மாணவனும், தற்போது பிரான்சில் வசிப்பவருமாகிய ஆறுமுகம் ஆனந்தகுமார் மாணவர் களின் நன்மைகருதிக் கடந்த புதனன்று பாடசாலைக்கு வருகை தந்து சூரிய மின்கலம் ஒன்றையும் அதன் உதிரிப்பாகங்களையும் கையளித்தார்.

மேற்படி நிகழ்வு பாடசாலை முதல்வர் பொன் தில்லைநாதன் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் உரையாற்றிய ஆனந்தகுமார் பாடசாலையில் தனக்குக் கற்பித்த ஆசிரியரே இருப்பது தமக்கு மகிழ்வைத் தருகின்றது எனக் கூறியதுடன், தான் பிரான்ஸ் சென்று புலம்பெயர்ந்த மற்றவர்களுடன் கலந்துரையாடி இப்பாடசாலையின் கற்றல் வளங்களை அளிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மாணவத்தலைவர் சு.கோணேஸ்வரனும் உரையாற்றினார். உபஅதிபர் இ.புஸ்பராசா நன்றியுரையாற்றினார். (34)

# மன்னார் பிரதேச செயலகத்தில் இன்று பௌர்ணமிக் கலைவிழா

(மன்னார்)

மன்னாரில் கல்வி பண்பாட்டு அலுவலர்கள் விளையாட்டுத் துறையமைச்சின் அனுசரணையுடன் மன்னார்ப் பிரதேச செயலகத்தில் பௌர்ணமிக் கலைவிழா நிகழ்வு இன்று நடத்தப்படவுள்ளது.இதற்கு பிரதமவிருந்தினராக வடக்குகிழக்கு மாகாணசபையின் கல்வியமைச்சின் செயலாளர் ஆர் தியாகலிங்கமும் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் வி. விஸ்வலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். மன்னார் நகரமண்டபத்தில் மாலை ஆறுமணியளவில் நடைபெறும் இந்நிகழ்விற்கு மன்னார் நகரப் பிரதேச செயலாளர் தலைமை தாங்குகின்றார். (மி)

# முல்லை மாவட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(ஒட்டுசுட்டான்)

முல்லை.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி கடந்த வியாழன்று காலை 9.00 மணிக்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மங்கல விளக்கினை துணுக்காய் முல்லை. வலய உதவி, பிரதிக் கல்விப்பணிப்பாளர்களும், மாந்தை கிழக்கு கோட்டக் கல்வி, ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரிகளும் ஏற்ற, தேசியக்கொடியினை துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் மா.தெய்வேந்திரம் ஏற்ற தேசியக் கீதத்தினை கலைமகள் வித்தியாலய மாணவர்கள் இசைத்தனர். தமிழ்தாய்வாழ்த்தினை வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்கள் இசைத்ததைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் நிதர்சனப் போராளிகள், பிரதேசப் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*மாவட்ட மட்டத்திலான தமிழ்த் தினப் போட்டி முடிவுகள் சில வருமாறு.*

பேச்சு

பிரிவு-01:- 1ஆம்இடம் மு/கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயம், 2ஆம் இடம் மு/சுப்பிரமணியம் வித்தியாலயம், 3ஆம் இடம் மு/கருவேலன் கண்டல் அ.த.க. பாடசாலை.

பிரிவு-02:-

1ஆம் இடம் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, 2ஆம் இடம் முல்லைத் தீவு மகாவித்தியாலயம், 3ஆம் இடம் ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம்.

பிரிவு -03:-

1ஆம் இடம் கலைமகள் வித்தியாலயம், 2ஆம் இடம் புதுக்குடியிருப்பு ம.வி, 3ஆம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி.

பிரிவு-04:-

1ஆம் இடம் யோகபுரம் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் முல்லை மகாவித்தியாலயம், 3ஆம் இடம் ஒட்டு சுட்டான் மகாவித்தி யாலயம்,

பிரிவு- 05:-

1ஆம் இடம் புதுக்குடியிருப்பு ம.வி, 2ஆம் இடம் யோகபுரம் ம.வி, 3ஆம் இடம் முல்லைத்தீவு ம.வி,

**இசைவும் அசைவும்:-**

பிரிவு-02:-

1ஆம் இடம் யோகபுரம் ம.வி, 2ஆம் இடம் இரணைப்பாலை றோ.க. பாடசாலை, 3ஆம் இடம் துணுக்காய் அ.த.க. பாடசாலை.

வில்லிசை

1ஆம் இடம் முல்லைத்தீவு ம.வி, 2ஆம் இடம் சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், 3ஆம் இடம் மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்.

பாவோதல்:-

பிரிவு-01

1ஆம் இடம் சிறி முருகானந்தா வித்தியாலயம், 02ஆம் இடம் கோம்பாவில் விக்கினேஸ்வரா, 3ஆம் இடம் அனிஞ்சயன் குளம், த.க.வித்தியாலயம்.

பிரிவு-2

1ஆம் இடம் முல்லை• றோமன் கத்தோலிக்க பாடசாலை, 2ஆம் இடம் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, 3ஆம் இடம் வித்தியானந்தாக்கல்லூரி.

பிரிவு-3

1ஆம் இடம் சிறிமுருகானந்தா வித்தியாலயம், 2ஆம் இடம் சுப்பிரமணியம் வித்தியாலயம், 3ஆம் இடம் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை.

பிரிவு-4

1ஆம் இடம் முல்லை. ம.வி,2ஆம் இடம் கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, 3ஆம் இடம் கரிப்பட்டமுறிப்பு அ.த.க.பாடசாலை.

பிரிவு-5

1ஆம் இடம் யோகபுரம் ம.வி, 2ஆம் இடம் வித்தியானந்தாக் கல்லூரி, 3ஆம் இடம் முல்லைத்தீவு ம.வி.

வாசிப்பு-

பிரிவு-1

1ஆம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி, 2ஆம் இடம் சிறி சுப்பிரமணிய வித்தியாலயம், 3ஆம் இடம் பனங்காமம் பற்று மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை.

பிரிவு-2

முதலாம் இடம் சிறி சுப்பிரமணியம் வித்தியாலயம், 2ஆம் இடம் புதுக்குடியிருப்பு ம.வி, 3ஆம் இடம் ஒட்டுசுட்டான் ம.வி. (05)

# அரசியல் கள நிலையை மாற்றப்போவது சனாதிபதியா? ஜே.வி.பி.யா?

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகலாம் என்ற நம்பிக்கையை வளர்க்கக் கூடிய சில சமிக்ஞைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இதை வெளிப்படுத்துமாப்போல், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார் என ஏற்பாட்டாளர்களான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் அண்மையில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேசமயம், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் "மீண்டும் யுத்தம் வரவேவராது, யுத்தத்திற்கு வாய்ப்பு இல்லவே இல்லை" என அடித்துக் கூறுவதோடு, "அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு இறுதித் தீர்வு கிட்டுவதற்கான வாய்ப்புக்கள் மேலும் பிரகாசமாகத்தென்படும் நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளது" எனவும் தெரிவிக்கின்றார்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்மின் நம்பிக்கையானது சிறிலங்கா அரசு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி மற்றும் சர்வதேச நாடுகளின் அழுத்தம் என்பதன் பாற்பட்டதாகும். அதாவது, இன்று சிறிலங்கா அரசு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து, வைப்பதானால், டோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட 4500



கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி சிறிலங்காவிற்குக் கிடைக்கப்பெற்றாக வேண்டும் என்பது எரிக் சூல் ஹெய்மின் கணிப்புப் போன்றுள்ளது.

இதேவேளை, சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாதுபோனால், சிறிலங்கா அரசிற்கு நிதியுதவி வழங்கப்படமாட்டாது என்பது குறித்துச் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளும், உலக நிதி நிறுவனங்களும் சிறிலங்கா ஆட்சியாளருக்குத் தெளிவாகவே உணர்த்திவிட்டனர் எனவும் எரிக் சூல் ஹெய்ம் கருதுவது போன்றும் உள்ளது.

இதேவேளை, எரிக் சூல்ஹெய்ம் கருதுவது போன்று இன்று நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியும் மிகப் பெரிதென்பது நிராகரிப்பதற்கு இல்லை. ஏற்கனவே, ஐ.தே. முன்னணி அரசாங்கம் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தவில்லை. சம்பள உயர்வு, வழங்கவில்லை எனக் குற்றம் சாட்டி ஆட்சிக்கு வந்த ஐ.ம.சு. முன்னணி ஆட்சியில் விலைவாசி ஏற்றமும், வாழ்க்கைச் செலவும் முன்பைவிட அதிகரித்த வேகத்தில் உள்ளது என்பதை ஆட்சியாளர்களே இன்று வெளிப்படையாகக் கூறும் நிலையே ஏற்பட்டுள்ளது.

ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, "நாட்டின் பொருளாதாரம் மிகவும் பயங்கரமான நிலையை எட்டியுள்ளதாகவும், நாட்டின் அதிகாரிகளும், அமைச்சர்களும்கூட தங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும்" தெரிவிக்கின்றார்.

இவ்வாறு ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூற வேண்டிய அளவிற்கு இன்று பொருளாதார நெருக்கடி தீவிரம் பெற்றதாகியுள்ளது. எரிபொருட்களின் விலை அதிகரித்துச் செல்வதோடு, விலைவாசியும் கட்டுக்கடங்காது அதிகரித்துச் செல்கின்றது. எரிபொருள் விலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்காதுபோனால், விலைவாசி ஏற்றத்தை எந்த வகையிலும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியாது என்பதே நிதர்சனமாகும்.

இந்த வகையில், நாடு நெருக்கடிகளை நோக்கிச் செல்வதன் காரணமாக எவ்வாறெனும் பேச்சுவார்த்தையை சனாதிபதி சந்திரிகா ஆரம்பிக்க வேண்டியதாக இருக்கும். அப்பொழுதே நெருக்கடியில் இருந்து விடுபட முடியும் என்பதே நோர்வேத் தரப்பின் எதிர்பார்ப்பாக இருப்பதுபோல் தெரிகின்றது. இதனை மனதிற்கொண்டே எரிக் சூல் ஹெய்ம் கூட இவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்தியிருத்தல் கூடும்.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் யுத்தத்திற்கு வாய்ப்பே இல்லையென அடித்துக் கூறுவதற்கு யுத்தம் ஒன்று மூழுவதானால், ஏற்கனவே- யுத்த நிறுத்த காலத்திற்குள் - நிகழ்ந்துவிட்ட சம்பவங்களின் அடிப்படையில் யுத்தம் மூண்டிருத்தல் வேண்டும். அதிலும் குறிப்பாக, கருணா குழுவிற்கு அரசாங்கம் செய்த உதவிகள் வெளிப்பட்டபோதே யுத்தம் மூண்டிருக்க வேண்டும். ஆனால், யுத்தம் அவ்வேளையில் மூழவில்லை. ஆகையினால் இனி யுத்தம் மூழ்வதற்கான வாய்ப்பு இல்லவே இல்லை என்ற ரீதியில் அவர் முடிவிற்கு வந்திருத்தல் கூடும்.

இதனைத் தவிர, சர்வதேசத்தின் கண்டனத்திற்கும், அழுத்தத்திற்கும் உள்ளாவதைத் தவிர்க்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் போரை ஆரம்பிக்கமாட்டார்கள் எனவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுவதாகத் தெரிகின்றது.

இந்த வகையில், வெவ்வேறு காரணங்கள். ஆயினும் நோர்வேத் தரப்பும், சனாதிபதி தரப்பும் யுத்தம் மூழ்வதற்கான வாய்ப்பில்லை எனவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான வாய்ப்புகளே உண்டு என்ற அடிப்படையிலும் தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால், யுத்தம் மூழ்கின்றதோ, இல்லையோ சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான கள நிலை உண்டா? என்ற கேள்விக்கு சாதகமான பதில் அளித்தல் என்பது கடினமானதொன்றே. ஏனெனில், இவ்விடயத்தில் ஆளும் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு ஏற்றதான நிலைப்பாட்டைக் கொண்டதாக இல்லை.

ஆரம்பம் முதலே விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றி எதிர்ப்பைத் தெரிவித்துவந்த ஜே.வி.பி. இவ்விடயத்தில் தற்பொழுது மேலும் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருவதாகவே உள்ளது. அதாவது, நாட்டின் மோசமான பொருளாதார நிலையைக் காரணமாகக் கூட அது தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை என்பதையே அதன் அண்மைய நடவடிக்கைகள் வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

இந்த வகையில், இரண்டு முக்கிய விடயங்களை அது அண்மையில் தெளிவாகவே வெளிப்படுத்தி வருகின்றது.

01) 4500 கோடி அமெ. டொலர் நிதி யுதவிக்காக நாட்டை கூறுபோட முடியாது.

02) நோர்வேயை மத்தியஸ்துவத்தில் இருந்து விலக்கிக் கொள்வதற்கான முயற்சி.

ஜே.வி.பி.யின் தற்போதைய பிரச்சாரமானது விடுதலைப்புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுவார்த்தையானது நாட்டை கூறுபோடுவதற்கான நடவடிக்கை என்பதாகவே உள்ளது.

சிறிலங்கா தழுவியதான ரீதியில் "உண்மையான சமாதானத்தின் எதிரிகள் யார்" என்ற தலைப்பில் பகிரங்க சொற்பொழிவுகளை நடாத்திவரும் ஜே.வி.பி.யின் இத்தகைய கருத்துக்களை வெளிப்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றனர். மகரகமயில் இத்தகைய கூட்டம் ஒன்றில் பேசிய ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச, "4500 கோடி டொலர் நிதியுதவிக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கோம். பசி, பட்டினி கிடந்தாவதும் இடைக்கால நிர்வாக சபை உருவாவதைத் தடுப்போம். தாய் நாடே எமக்கு உயர்வானது" எனத் தெரிவித்ததோடு, "யுத்த ரீதியிலான பின்னடைவை நிவர்த்தி செய்து கொள்ளலாம். அரசியல் ரீதியிலான பின்னடைவையும் நிவர்த்தி செய்ய முடியாது" எனவும் தெரிவித்துள்ளார்.

இது போன்ற வேறொரு கூட்டத்தில் பேசி அவர், "டோக்கியோ மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட 4.5 பில்லியன் டொலர் நிதியுதவி இலங்கையைத் துண்டாடுவதற்கான திட்டமெனவும், எனவே, பணத்திற்காக நாட்டைக் காட்டிக் கொடுப்பதா? அன்றித் தேசிய பொருளாதாரத்தை வளர்ப்பதா? என்பதைப் பொதுமக்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்" எனவும் குறிப்பிட்டார்.

இது ஒரு புறம் இருக்க, சமாதான ஏற்பாட் டாளர் நிலையில் இருந்து நோர்வேயை வெளியேற்றி விடுவதிலும் ஜே.வி.பி. தீவிர அக்கறை கொண்டதாகவுள்ளது. ஆரம்பம் முதலே நோர்வேயின் மத்திஸ்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த ஜே.வி.பி. அந் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாக இல்லை.

அண்மையில்கூட, விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அனுசரணையாளர்களாகப் பங்குவகிக்கும் நோர்வேயை அதிலிருந்து வெளியேறுமாறு சிங்களத் தேசப்பற்றாளர் இயக்கம் விடுத்த கோரிக்கையின் பின்னணியில் ஜே.வி.பி. யினரே இருந்தனர். இது தொடர்பாக நோர்வே பிரதமருக்கு இவ் அமைப்பு அனுப்பிய கடிதத்தில் ஜே.வி.பி. முக்கியஸ்தர் விமல் வீரவன்சவும் கையொப்பம் இட்டிருந்தார்.

இந்த வகையில் பார்க்கையில் ஜே.வி.பி. யின் நிலைப்பாடானது தெளிவாகவே பேச்சுவார்த்தைக்கு எதிரானதாகவும், நோர்வேயின் மத்தியஸ்துவத்திற்கு எதிரானதாகவும் வெளிப்படுத்தப்படுவதாகவும் உள்ளது. வேறுவிதமாகக் கூறுவதானால், ஜே.வி.பி.யினரின் நிலைப்பாடானது பேச்சுவார்த்தையைவிட யுத்தம் சிறந்தது என்பது போன்றதாகவே உள்ளது.


இதனை உறுதிப்படுத்துவது போன்றதாகவே யுத்த நிறுத்தத்திற்கும், கண்காணிப்புக்குழுவிற்கும் எதிரானதுமான அதன் நடவடிக்கையும் உள்ளது. இந்த வகையில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டை இரத்துச் செய்யக் கோரி மேல்முறையீட்டு நீதிமன்றில் அது வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அத்தோடு, கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கை புலிகளுக்குச் சார்பாகவுள்ளதாகவும் அடிக்கடி அது குற்றம் சாட்டியும் வருகின்றது.

அத்தோடு, சமாதானப் பேச்சுவார்த்தையின் ஏற்பட்டாளர் நிலையில் இருந்து நோர்வேயை வெளியேற்றுதல் என்பது இனப்பிரச்சினைத் தீர்விற்கு சர்வதேச மத்தியஸ்துவமே தேவையற்றது என்பது ஜே.வி.பி. யின் நிலைப்பாடு எனினும், தேவை ஏற்படின் இந்தியாவின் மத்தியஸ்துவம் என்பதே அதன் நிலைப்பாடாகும்.

இந்நிலையில், தற்பொழுது எழும் கேள்வியானது, நோர்வே தரப்பும் சனாதிபதி சந்திரிகாவும் எதிர்பார்ப்பது, தெரிவிப்பது போன்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை உண்டா என்பதே? அவ்வாறு அது சாத்தியமானால் சிறிலங்கா அரசியல் சூழ்நிலை தற்போதைய நிலையில் நீடிக்க முடியுமா? என்பதுமே ஆகும்.

அதாவது, இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முனைப்பான முரண்பாடு விடுதலைப்புலிகளுக்கும், சனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையிலானதாக இல்லை. ஜே.வி.பி.க்கும் - சனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையிலானதாகவே உள்ளது. ஆகையினால், பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதென்பது அண்மையில், தம்மை லண்டனில் சந்தித்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்மிடம் விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று "சமாதானப் பேச்சுக்களுக்கு உயிரூட்டுவது சனாதிபதி சந்திரிகாவின் கைகளிலேயே உள்ளது".

ஆனால், சனாதிபதி சந்திரிகாவினால்



தற்போதைய அரசியல் கள நிலையை மாற்றி சமாதான முயற்சிகளுக்கு உயிரூட்டுவதென்பது சாத்தியப்பாடானதொன்றாக இருக்கமாட்டாது. ஏனெனில், ஜே.வி.பி.யின் அரசியல் நிலைப்பாடானது ஆட்சி அதிகாரத்தை நோக்கியதானதாக உள்ளதே ஒழிய இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கியதானதாக இல்லை. தாம் ஆட்சி அதிகாரம் நோக்கி முன்னேறச் சமாதான வழி முறைகளைக் குழப்புவதற்கும் ஜே.வி.பி. தயாராகவே உள்ளது.

ஆகையினால், அரசியல் கள நிலை மாற்றி அமைக்கப்படாது சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதோ முன்னேற்றம் காண்பதென்பதோ சாத்தியப்பாடானதல்ல. அவ்வாறு இல்லாது முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் ஜே.வி.பி. அரசியல் கள நிலையை மாற்றி அமைப்பது மட்டுமல்ல, யுத்தத்தையும் கொண்டுவந்து விடும்.

**ஜெயராஜ்**

---

## கோதுமை மாவின் விலை அடுத்த சில தினங்களில் உயரும்!

(கொழும்பு)

இலங்கையில் வாழ்க்கை செலவின் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. இதன் காரணமாக நாட்டில் பாரிய பொருளாதார சிக்கல் நிலை உருவாகுமென எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கோதுமை மாவின் விலை அடுத்த சில தினங்களில் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் தற்சமயம் காணப்படும் கோதுமை மாவுக்கான தட்டுப்பாட்டை அடுத்தே இந்த எதிர்வு கூறப்பட்டுள்ளது. அரசாங்கம் கோதுமை மாவுக்கான மானியத்தை இரத்துச் செய்யப்போவதாக அறிவித்துள்ள நிலையில் தாம் கோதுமை மாவின் விலையை அதிகரித்த நிலையில் மீளமைக்க வேண்டியேற்படும் என பிரிமா நிறுவனமும் அறிவித்துள்ளது.



## புரிந்துணர்வின் 1.8 சரத்துக்குறித்து மேற்குலக இராஜதந்திர தரப்பு அக்கறை!

இலங்கைத்தீவின் இரு தரப்பிற்குமிடையேயான அமைதியைப் பேணுவதற்கு ஏதுவாயுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுள்ள ஒரு சரத்தை அரசு இதுவரை நிறைவேற்றாது உள்ள விடயம் மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களின் கரிசனைக்குத் தற்போது உள்ளாகியுள்ளது.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 1.8இன் பிரகாரம் வட கிழக்குப் பகுதிகளில் அரசுடன் இணைந்து செயற்பட்டு வரும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 30 நாட்களிற்குள் களையப்படுவதோடு, அக் குழுக்களின் உறுப்பினர்கள் அரச படைகளில் இணைக்கப்பட்டு அவர்கள் வடகிழக்கு மாகாணங்களிற்கு வெளியே செயற்பட அனுமதிக்கப்படுவார்கள் என்பது எழுத்து மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.எனினும் சிறிலங்கா அரசு இவ்விவகாரத்தில் இதுவரை காலமும் சிரத்தை காட்டாத நிலையே இன்றைய நிலைக்கான காரணம் என்பதை சமாதான நகர்வுகளில் அக்கறையுள்ள மேற்குலக வட்டாரங்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவரும் அதேவேளை சிறிலங்காவிற்கான நிதிவழங்கும் செயற்பாடுகளுக்கான ஒரு நிபந்தனையாக இந்த விவகாரத்தை முன்னிறுத்தும் செயற்பாட்டில் அவை ஈடுபடும் என்றும் தெரியவருகிறது

# காஷ்மீர் பிரச்சினையை புறந்தள்ளி

# இந்தியா~பாகிஸ்தான் சமாதானப் பேச்சுக்கள்~~~?


இந்தியப் பிரதமர்


பாகிஸ்தான் சனாதிபதி

காஷ்மீர் எல்லையில் தீவிர வாதத்தை ஒழிக்க இந்தியாவும், பாகிஸ்தானும் இணக்கம் தெரி வித்துள்ளன. எப்படி நடை முறைப்படுத்துவது என்பது குறித் துப் பேச்சுவார்த்தை நடத்தவும் முடிவு செய்துள்ளன.

இருநாடுகளது உறவிலும் முன் னேற்றம் ஏற்பட்டுள்ளதே... என்று தான் எதிர்பார்ப்பு நிலவுகின்றது. இருநாடுகளும் கூட அதையே தான் விரும்புகின்றன.

ஆனால் இதுவரை நடத்திய பேச்சுவார்த்தை அதைத்தான் காட்டி நின்றாலும் இனிமேல் தான் சிக்கலான தருணம் இரு நாடு களையும் ஆட்கொள்ளவுள்ளது.

ஏனெனில் இதுவரை இரு நாடுகளும் இலகுவான விடயங் களைத் தான் பேச்சுவார்த்தை களில் பரிமாறிக்கொண்டன. இணக்கமும் கண்டன. ஆனால் சிக்கலான விடயம் ஒன்று உள் ளது. அதுதான் காஷ்மீர் விவ காரம்.

காஷ்மீர் விவகாரம் தீராதவரை இருநாட்டு உறவுகளும் எப் பொழுதும் பாதிப்படையலாம். ஏன்.... போர் கூட மூழலாம். அணு வாயுதங்களைக் கொண்டுள்ள இருநாடுகளும் முட்டி மோதிக் கொள்ளவும் தயாராகக் கூடும்.

ஏனெனில் இந்த நிலைதான் இரு நாடுகளிடையேயும் இது வரை இருந்தும் வருகின்றன. எனவே இந்திய-பாகிஸ்தான் உறவு, சீரடைய, காஷ்மீர் பிரச் சினை தீர்க்கப்படவேண்டும்.

இதனை இரு நாடுகளும் புரிந்து கொண்டுள்ளதால் தான் காஷ்மீரை விடுத்து ஏனைய பிரச் சினைகளை பேசி வருகின்றன. காஷ்மீர் விடயம் பேசப்படாததால் தான் இதுவரை அமைதி முயற்சி தொடர்கின்றது. என்றே நம்பலாம்.

அந்த வகையில் வாகா எல் லையில் மோதல் குறைந்துள்ளது என்றும், போதைப்பொருள் கட்டுப்பாடு இறுக்கமடைந்துள் ளதாகவும் கூறப்படுவது இதனால் தான்.

அத்துடன் கடந்த ஜுலையில் இருநாட்டு வெளியுறவுச் செயலர் களும் கூட்டறிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர்.

*இருநாட்டுத் தொலைத் தொடர்பு வசதிகளை மேலும் மேம்படுத்தல்.

*தற்செயலாக போர் மூழும் அபாயத்தைத் தவிர்க்க தொலை தூர ஏவுகணைகளை சோதிப்ப தற்கு முன்னர் தகவல் தெரிவித் துக்கொள்ள ஒப்புதல்.

*2001 இல் இந்திய பாராளு மன்றம் தாக்கப்பட்ட பின்னர் இரு தரப்பு தூதரகங்களிலும் ஊழியர் எண்ணிக்கை 47ஆக குறை வடைந்தது. மறுபடி 110ஆக உயர்த்தப்படும்.

*காராச்சியில் 1994 இல் மூடப்பட்ட இந்தியத் தூதரகம் மறுபடி திறக்கப்படும். மும்பை யிலும் பாகிஸ்தான் தூதரகம் திறக்கப்படும்.

*கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் இரு தரப்பும் விடுதலை செய்யும்.

*காரணமின்றி இருநாடுகளிலும் சுற்றித் திரிபவர்கள் கைது செய் யப்படுவது தவிர்க்கப்படும். அவர வர் அந்தந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுவர்.

இவை யாவும் எப்போது நடை முறைப்படுத்தப்படவுள்ளது என் பது பற்றி இரு நாடுகளும் மூச்சு விடவில்லை. சாத்தியப்படும் என்று வாய் வார்த்தையில் மட்டும் ஒப்புக கொண்டுள்ளன.

ஏனெனில் இந்தியாவைப் பொறுத்தவரை பாகிஸ்தான் தீவிர வாதத்தைப் பரப்பி வருகின்றது இது இந்தியாவைச் சிதைத்து விடும் என்று கருதுகின்றது.

மறுபுறம் பாகிஸ்தானோ அஷாத் காஷ்மீரை விட்டுக் கொடுத்து விடுமாறு இந்தியா கேட்டுவிட்டால் ... என்று அஞ்சு கின்றது.

இதனால் தான் “ஓடும் நீரில் நழுவும் மீனாக'' இரு நாடுகளும் செயற்பட்டு வருகின்றன.

இதேவேளை பாகிஸ்தானிடம் இந்தியா சில ஆலோசனைகள் எனும் பெயரில் கோரிக் கைகளை முன்வைத் துள்ளது இவற்றில்

*ஸ்ரீநகருக்கும் முஸா பராபாத்திற்கும் இடையில் பேருந்து சேவை

*பாகிஸ்தானுக்கும் சியாஸ் கோட்டிற்கும் காஷ்மீரிலுள்ள சுசேத்கர் இடத்திற்கும் பேருந்து சேவை.

*பாகிஸ்தான் ஆக்கிர மிப்பு காஷ்மீரிலிருக்கும் புனித தலங் களுக்கு இந்திய கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள காஷ்மீர் மக்களை அனுமதித்தல்.

*கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு இரு பக்கங்களிலிருக்கும் காஷ்மீர் மக்களுக்கிடையே கலாசார உறவு களை மேம்படுத்தல்.

*கட்டுப்பாட்டுக் கோட்டில் வாழும் காஷ்மீர் மக்களுக்காக எல்லைப்பகுதி வியாபார மையங் களைத் திறத்தல்.

* வனப்பாதுகாப்பில் இந்தியா, பாகிஸ்தான் இணைந்து செயற் படல்.

* விமானப்படை, கடற்படை தலைமையங்களுக்கிடையே அதிக தகவல் தொடர்பு வசதி.

* பாதுகாப்பு ஆலோசகர்களி டையே தகவல் தொடர்பு.

ஆனால் பாகிஸ்தான் எந்த ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. ஏனெ னில் இந்தியாவின் ஆலோச னைகள் அனைத்தும் காஷ்மீரை கவருவதும், தம்வசப்படுத்து வதும் தான் என்பது பாகிஸ் தானின் திடமான நம்பிக்கை.

தமது வசமுள்ள அஷாத் காஷ் மீருக்கும் இந்திய வசமுள்ள ஜம்மு காஷ்மீருக்குமிடையே கலாசார உறவுகளை இந்தியா ஏற்படுத்து வதாகக் கூறுவதை பாகிஸ்தான் நம்பத் தயாரில்லை.

இதனை நேரடியாக பாகிஸ் தான் நிராகரிப்புச் செய்யவில்லை. மாறாக இந்தியாவின் ஒவ்வொரு ஆலோசனைக்கும் மிகப்பெரிய முட்டுக்கட்டைகளை போட்டிருப் பது கவனிக்கதக்கதோர் விடயம்.

இந்த வகையில் ஸ்ரீநகருக்கும் முஸாபராபாத்திற்கும் இடையில் பேருந்து சேவை ஆரம்பிக்கும் போது பேருந்தில் பயணம் செய் பவர்கள் கடவுச்சீட்டும், விசாவும் வைத்திருந்தால் போதும் எனும் இந்தியாவின் ஆலோசனையை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

அதாவது பேருந்தில் பயணம் செய்பவர்கள் ஐ.நா.சபை வழங் கிய ஆவணங்களுடன் தான் பய ணிக்க முடியும் என்று கூறியுள் ளது.

ஐ.நா. சபையிடம் ஆவணங்க ளைப் பெற்று வருவது என்பது மக்களைப் பொறுத்தவரை இலகு வான விடயமல்ல. எனவே பேருந் துச் சேவை என்பது இந்தியா கூறுவது போன்று நடந்திடக் கூடிய ஒன்றல்ல.

சாதாரண பேருந்து விடயத்தில் கூட இரு நாடுகளும் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்ப தைத் தான் இந்த விடயம் படம் பிடித்துக் காட்டு கின்றது.



எனவே அரை நூற்றாண்டிற்கு மேற்பட்ட காஷ்மீர் சிக்கலில் மட்டும் இரு நாடுகளும் விட்டுக் கொடுத்து இணக்கத்தை எட்டுவது என்பது “கேளவரகில் நெய்வடிக்கின்றது” எனும் கதை யாகத்தான் இருக்க முடியும்.

இருநாடுகளும் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கும் உண்மை விடயம் இதுதான்! அதனால் தான் தந்திரத்துடனும் அவரவர் சுய நலத்திற்காகவும் இரு நாடுகளும் சமாதானம் எனும் போர்வையில் கைகுலுக்கிக் கொள்கின்றன.

இந்தியாவைப் பொறுத்த வரை அமைதி முயற்சியை நீடிக் கத்தான் விருப்பம் கொண்டுள் ளது. ஏனெனில் இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கையில் பாகிஸ்தான் ஈடுபடுவதைத்தடுக்க வேண்டும் என்பதுதான் அதன் முதல் இலக்கு.

அதனால் தான் போக்குவரத்து வசதிகள், கிரிக்கெட் போட்டிகள், இந்தியாவில் பாகிஸ்தானியர்க ளுக்கு இலவச சத்திரசிகிச்சை என்று சலுகைகளை அள்ளி வழங்குகின்றது.

மறுபுறம் பாகிஸ்தானின் பொரு ளாதாரம் நாசமாகிக் கொண்டிருக் கின்றது என்று கூறப்படுகின்றது. அதனைச்சீரமைக்கவேண்டிய நிலைக்கு பாகிஸ்தான் தள்ளப் பட்டுள்ளது. எனவே இந்தியா வுடன் அமைதி காப்பது மிக முக் கியம்.

அதனால் தான் இந்தியாவின் சமாதானக் கைகளை பாகிஸ் தானும் மறுப்பின்றி பிடித்திருக் கின்றது. அது மட்டுமன்றி தனது வசமுள்ள அஷாத் காஷ்மீர் மக்க ளுக்காக தன்னை விட்டால் வேறு யாருமே குரல்கொடுக்க மாட் டார்கள் என்றும் காட்டிக்கொள்ளத் தவறவில்லை.

அந்த வகையில் அஷாத் காஷ் மீர் தலைவர்களுடன் அடிக்கடி பேச்சுக்கள் நடத்திக்கொண்டும் இருக்கின்றது.

மறுபுறம் கராச்சியில் அடிக்கடி குண்டு வெடிக்கின்றது முஷாரப் மீதும், கராச்சி இராணுவத் தளபதி மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட டும் இருக்கின்றன.

முஷாரப் கொள்கைகள் மீது விருப்பமில்லாதவர்கள் தான் இந்த தாக்குதல்களை நடத்துவ தாக பாகிஸ்தான் குற்றம் சாட்டி யுள்ளது.

எனவே பாகிஸ்தானுக்குள் ளேயே எதிர்ப்பு நிலவுகின்றமை யினால் முஷாரப் நகரும் ஒவ் வொரு அடியும் அவதானிக்கப் படலாம். குறிப்பாக அஷாத் காஷ் மீர் விடயத்தில் இந்த நிலை நீடிக்கமுடியும்.

எனவே “காஷ்மீர் விவகாரம்” என்பது இந்திய-பாகிஸ்தான் அரசியலில் தீர்க்கப்படக் கூடிய ஒன்றல்ல. நிலுவையில்தான் காலம் காலமாக இருந்துவிடப்போகின்ற தோ..... எனுமச்சம் இல்லாம லில்லை.

**அ.கலைவாணி**

உண்மையில் காஷ்மீர் சிக் கலுக்குள் தான் இந்திய- பாகிஸ் தான் சமாதானம் சிக்கியுள்ளது. அதுதீராதவரை இந்தியாவும்- பாகிஸ்தானும் எத்தனை சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தினாலும் அது “விழலுக்கு இறைத்த நீரே” ஆகும் என்றால் மிகையில்லை.

---

*–புதுக்குடியிருப்பு ம. வி யில்–*

## பழைய மாணவர் சங்க உதவியில் கேட்போர் கூடம் அமைக்க ஏற்பாடு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மகாவித் தியாலய ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தால் இவ்வித்தியாலயத்தில் ஒரு கோடி ரூபா செலவில் கட்டப்படவுள்ள கேட்போர் கூடத்துக்கான அடிக் கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளது.

பிற்பகல் 1.30 மணிக்கு முல்லை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா சம்பி ரதாய பூர்வமாக அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

மேலும் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தால் பாடசாலைக்கான சுற்று மதில், தண்ணீர்த் தொட்டி உட்படபல வேலைத்திட்டங்கள் செய்யப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(08)

## அம்பலவன் பொக்கணையில் மீனவர் படகு மீதான கடற்படையின் தாக்குதல் மிலேச்சத்தனமானது

**-பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம்**

(புதுக்குடியிருப்பு)

கடந்த 01.09.2004 அன்று முல்லை மாவட்டத்தில் உள்ள அம்பலவன் பொக்கணைக் கிராமத் திலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற அப்பகுதி மீனவர்கள் மீது சிறிலங்காக் கடற்படையினர் மறித்து தாக்குதல் நடத்தியமையானது ஒரு மிலேச்சத்தனமான செயலா கவே கருதவேண்டியுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சதா சிவம் கனகரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் சமாதானச் சூழ்நிலை நடை முறையில் இருக்கும் இவ் வேளை யில் தங்கள் ஜீவனோபாயத் துக்காக அப்பாவி மீனவர்கள் கடலுக்குச் செல்கையில் இவ்வா றான தாக்குதலை சிறிலங்கா கடற்படையினர் நடத்தியுள்ளனர். இதனால் அம்மீனவர்கள் மயிர் இழையில் உயிர் தப்பியுள்ளனர் என்று கூறிய அவர் சிறிலங்கா கடற்படையினரின் செயற்பாட்டினை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக வும் இச்சம்பவம் தொடர்பாக சம் பந்தப்பட்ட அமைச்சுக்கு தெரியப் படுத்தி இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் தொடராது இருக்க உரிய நடவடிக்கை எடுக்க இருப் பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(08)

# "அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு அரசை ஆட்டங்காணச் செய்யும்!"

**அபிவிருத்தியின் பலன் கிட்டவில்லையெனில் மக்கள் அரசாங்கத்தைத் தூக்கியெறிவர்.**

**- லக்ஷ்மன் கதிர்காமர்**


**வாழ்க்கைச் செலவைக்குறைக்க அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் போராட்டம் நடத்துவோம்.**

**- லால்காந்த-ஜே.வி.பி.**

மேற்சொன்ன இரண்டு விதமான கருத்துக்களையும் தெரிவித்தவர்கள் வேறுயாருமல்ல. ஆளும் ஐ.ம.சு முன்னணியைச் சேர்ந்த அமைச்சர்களான வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஜே.வி.பியின் அமைச்சரும் அக்கட்சியின் தொழிற்சங்க இணைப்பாளருமான லால்காந்த என்பவர்களுமர்வர். இவர்கள் இருவரும் ஓரே கூட்டணிக்குள்ளே இருக்கும் அமைச்சர்களும் அக்கூட்டணியின் இரு துருவங்களான கொள்கைகளைக் கொண்டவர்களாயினும் இவர்கள் கூறிய கருத்து நேரடியாகவே யதார்த்தத்தை உடையதாகவும், தேவையின் அடிப்படையையும் அவசியத்தையும் கொண்டதாகவே இருக்கின்றது.

உண்மையிலே மேற்கூறிய இரு கருத்துக்களும் ஒரே விடயத்தையே பிரதிபலித்து நிற்கின்றன. ஏனெனில் நாட்டு மக்கள் தற்போது இருக்கின்ற பொருளாதாரச் சுமையையும் நெருக்கடிகளையும், தாங்க முடியாத உணர்விலே இருக்கிறார்கள் என்பதை தெட்டத்தெளிவாக வெளிப்படுத்துபவையாகவே அமைந்துள்ளது. எனினும் இக்கருத்துக்களைக் கூறியவர்கள் யார் என்பதே இங்குள்ள கேள்வி இக்கருத்தையும், எச்சரிக்கையையும் விடுவதற்கு உரித்துடையவர்கள் இவர்கள்.

உண்மையிலேயே இக்கருத்தையும் எச்சரிக்கையையும்



விடுத்திருக்க வேண்டியவர்கள் ஓர் ஆளும் கட்சி சாராத எதிர்க் கட்சியினராகவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் ஓர் ஆளும் கட்சியின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிப்பவர்களும், எதிர் நடவடிக்கை சார்ந்த கருத்துக்களையும் வெளியிடுபவர்களும் நிச்சயமாக எதிர்க்கட்சி சார்ந்தவர்களாகவே இருப்பது வழமை, இங்கே லக்ஷ்மன் கதிர்காமர் கூறிய கருத்தும், ஜே.வி.பியின் அமைச்சர் கூறிய கருத்தும், ஒன்றையே நிச்சயமாக வெளிப்படுத்துகிறது. அது "வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை" என்பதேயாகும்.

உண்மையிலே தேர்தல் காலத்திலே அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்குமாக இருந்திருந்தால் இன்றைய பொருளாதார நெருக்கடி மக்கள் மேல் சுமத்தப்பட்டிருக்காது. அதாவது இன்று அதிகரித்துக்

**ஸ்ரீபன்**

காணப்படும் வாழ்க்கைச் செலவும், பணவீக்கமும் நேரடியாகவே சாதாரண மக்களையே தாக்கு கின்றதே தவிர அரசியல் வாதிகளையல்ல. இதனால் நாட்டு மக்கள் சலிப்படைந்தவர்களாகவும், சினம் கொண்டவர்களாகவும் இருப்பர் என்பதை உணர்ந்து கொண்டவர்போல் கூறியிருப்பது ஒன்றும் வியப்புக்குரியது அல்லவென்றாலும், ஓர் அரசாங்கத்தைச் சேர்ந்த முக்கியதொரு அமைச்சர் கூறியிருப்பதானது அரசாங்கத்தின் தவறையும் பிழையையும் ஒத்துக்கொள்வதாகவே அமையும் அதே வேளை அமைச்சர் கூறியிருப்பதானது அரசாங்கத்திற்கு ஒரு எச்சரிக்கையாகவும், நடவடிக்கைகளை தற்போது செல்லும் திசையில் இருந்து திருப்ப வேண்டிய கட்டாயக் கடப்பாட்டிற்கும் இட்டுச் செல்வதாகவே அமைகின்றது. இல்லையேல் அமைச்சரின் கூற்று அல்லது தீர்க்கதரிசனம் மெய்ப்பட்டுப் போய்விடும். பொருளாதார நெருக்கடியை மக்கள் சந்திப்பதற்கும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாமல் இருப்பதற்கும் ஒட்டு மொத்தத்திலே கூறப்போனால் தேர்தற் காலங்களிலே அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனமையாகும். அதிலும் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை ஆரம்பிக்காமல் விட்டமையே ஆகும்.

அதாவது இன்று சிறிலங்காவின் அரசியல் கள நிலமையிலே வைத்துப் பார்க்கின்றபோது 20 வருடங்களுக்கு மேலாக நீடித்த யுத்தம் நாட்டு மக்களை ஒரு முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்ல முடியாத நிலைமைக்குத் தள்ளியதும், ஒரு பகுதி மக்கள் பெரும் அழிவுகளையும், இழப்புக்களையும் சந்திக்க நேரிட்டதுமேயாகும்.




அதேவேளை அபிவிருத்தியின் விழிம்பை எட்டியிருக்க வேண்டிய நாட்டின் நிலைமையும் மேலும் பின்நோக்கித் தள்ளப்பட்டதும் நடந்த வரலாறாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கொண்டுவரப்பட்ட அமைதியும், யுத்தமற்ற சூழ்நிலையும் நாட்டுமக்களுக்கு குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு விமோசனமும் தந்துவிடவில்லை. ஆயினும் சந்திரிகா தலைமையிலான கூட்டணி அரசாங்கம் ரணிலின் அரசாங்கத்தைப் பலாத்காரமாக கலைத்து புதிய தேர்தலை நடத்தும் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் இதுவரை சுமார் ஐந்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் நிறைவேற்றியதாக இல்லை. மிக முக்கியமாக இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு அவர்கள் அளித்த வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் தற்போது நாட்டிலே ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை தனியே பொருளாதாரத்திலும் வாழ்க்கைச் செலவிலும் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. நாட்டிலே குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பதும், படுகொலைகள் அதிகரித்துள்ளமையும், ஒரு நிழல் யுத்தம் ஆரம்பித்து நடந்து கொண்டிருப்பதையே வெளிப்படுத்துகிறது.

குறிப்டாக, கொழும்பிலும் அதனையண்டிய பகுதிகளிலும் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட கொலைகள் நடைபெற்றதும், இதனை அரச பாதுகாப்பு சிவில் பொலிஸ் படையினரால் இதுவரையும் தடுத்து நிறுத்த முடியாத நிலைமை தொடர்ந்து செல்வதும், நாடு சந்தித்து நிற்கும் பாரிய நெருக்கடிகளேயாகும். இதுவரையும் விடுதலைப் புலிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்கும் இடையேயான இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதற்கு அனுசரணையாளர்கள் முயன்றபோதும் பேச்சுக்கள் தொடங்கப்படுவதற்கான சூழல் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கையாக புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்னும், நிலைப்பாட்டை அரச தரப்பு ஆக்கபூர்வமாகப் பரிசீலிக்கத் தவறிவரும் பின்னணியில் பேச்சுவார்த்தைக்கான நகர்வுகள் பின் நோக்கியதாகவே இருக்கப்போகின்றது. இந்த நிலை நாட்டை மேலும் மேலும் நெருக்கடிக்கு இட்டுச் செல்வது மட்டுமல்ல ஒரு யுத்தம் ஏற்பட்டுவிடும் அபாயமும் காணப்படவே செய்கிறது.

புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அடிப்படையில் 'பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் எனக் கூறிவரும் போதெல்லாம் அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. புலிகள் முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் ஆட்சியில் இருந்து தாம் பிரிந்து செல்லப்போவதாகவும் அறிவிப்புச் செய்திருந்தது. இந்த நிலையிலே சந்திரிகா தலைமையிலான கூட்டணி தமது கட்சியின் அறுதிப் பெரும்பான்மையைக்கூட நிறைவேற்றாத இக்கட்டுக்கள் ஜே.வி.பி.யின் மிரட்டல்களுக்கும் பயந்து அடிபணிந்து பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாத இக்கட்டுக்கள் சிக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி.யுடன் ஏற்பட்டுத்திக் கொண்ட உறவின் மூலம் துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாத நிலையிலே, நாளுக்கு ஒரு கருத்தும், அறிக்கையும் அவரது சக பாடிகள் சகிதம் விடுத்துக் கொண்டிருக்கின்றார்.



இதன் மூலம் ஏற்கனவே, முன்மொழியப்பட்ட இலங்கைக்கான நிதியுதவி கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, உலக வங்கியினால் முன்மொழியப்பட்ட சில திட்டங்களுக்கான நிதிகூட திரும்பப்பெறப்பட்டு வருகிறது. ஏற்கனவே, அமெரிக்காவும், இலங்கையின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி பேச்சுக்கள் தொடங் கப்படாவிட்டால் வேறுநாடு பக்கம் சென்றுவிடும் என எச்சரித்துள்ளது. இது இவ்வாறு இருக்க தற்போது நிலவிய பொருட்கள் விலையேற்றம் எரிபொருள் விலையேற்றம் போன்றன நாட்டின் ஏனைய துறைகளிலே தாக்கத்தைச் செலுத்த வாழ்க்கைச் செலவும் உயர்ந்து கொண்டு செல்லுகின்றது. இது மக்கள் வாக்களித்த கட்சியின் மேல் அதீத எரிச்சலை உண்டு பண்ணி ஒரு தேர்தல் வரும்போது ஆட்சிப் பீடத்தில் இருந்து அரசை தூக்கியெறியும் நிலைவரைக்கும் இட்டுச் செல்லலாம். ஏனெனில், கடந்த கால ரணில் அரசாங்கத்தின் ஆட்சியிலும் மக்கள் மேல் சுமத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு உயர்வு பொருளாதார நெருக்கடியே தேர்தலில் தோல்வியுற வைத்தது, இதனை நிகழ்கால அரசு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஆகவே பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை ரூபாயின் வீழ்ச்சி, எரிபொருள் விலையேற்றம், வெளிநாட்டு முதலீடுகள் குறைந்து செல்லுதல் என்பன முக்கிய காரணங்களாக இருக்கின்ற போதும் நாளுக்கு நாள் பெருகி வரும் குற்றச் செயல்களும், கொலை கலாசாரத்தின் மூலம் அந்நியச் செலாவணி மற்றும், பங்குச் சந்தையின் வீழ்ச்சியும் உள்நாட்டுப் பொருளாதார ஸ்திர நிலையைப் பாதிக்கவே செய்யும் எனவே இது நேரடியாக மக்களையே தாக்கம் செய்யும். இதற்கு முதலில் தீர்வு காணப்படவேண்டியது அவசியம். இனியும் இந்த நிலை நீடிக்குமாயின் நாட்டு மக்கள் தாங்க மாட்டார்கள்.

புலிகள் முன்வைத்த திட்ட வரைபினால் நாட்டுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லையென இறுதியாக ஒரு கருத்தை பொ.ஜ.ஐ முன்னணியின் செயலாளர் டி.எம். ஜெயரட்ண கூறியுள்ளார். தீவிர எதிர்ப்புக் காட்டிவரும் ஜே.வி.பியுடன் கூட்டை வைத்துக்கொண்டிருக்கும் கட்சியின் ஒரு முக்கிய அமைச்சரின் இவ்வறிப்பு பேச்சுக்களுக்கான கதவைத் திறக்குமா? அல்லது பேரினவாதிகளின் நெருப்பில் பொசுங்கி விடுமா? என்பது சற்று பொறுத்திருந்து தான் பார்க்கப்படவேண்டியதாயுள்ளது.

---

## தேசிய கைத்தொழில் அதிகார சபையின் மரவேலைப் பயிற்சிநெறி

(அலுவலக செய்தியாளர்)

தேசிய கைத்தொழில் அதிகார சபையால் மர வேலைப் பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனப் பளைப் பிராந்திய நிலையத்தில் 01.10.2004 அன்று இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப் படவுள்ளது.18 வயது தொடக்கம் 30 வயது வரையான இருபாலரும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு நாள் 25.09.2004 ஆகும். இக்கற்கை நெறிக்கு மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். அத்துடன் பயிற்சி முடிந்ததும் வேலை வாய்ப்பு உடனடியாக வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பதிவாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை,பளை எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புமாறு தொழிற்பயிற்சி விரிவுரையாளர் ச.சிறிஸ்கந்தராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(சோ,கு)

## இழப்பீடு வழங்க ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சியைத் தொடர்ந்து காப்புறுதி செய்யப்பட்டு நெற் பயிர்கள் அழிந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக செப்ரெம்பர் மாதம் மட்டும் மன்னார் மாவட்டத்திற்கு 3 இலட்சம் ரூபா நிதியை நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

விவசாய சேவை நிலையம் மூலமாக விபரங்கள் திரட்டப்பட்டு நிவாரணம் வழங்க ஏற்பாடு நடைபெறுகின்றது. (மி)

## மட்டக்களப்பு ஓட்டமாவடியில் கைக்குண்டு வீச்சுச் சம்பவம்

### எவருக்கும் காயமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடியில் நேற்று முன்தினம் அதிகாலை கைக்குண்டுவீச்சுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் எவரும் பாதிக்கப்படவில்லை என்று வாழைச்சேனைப் பொலிசார் கூறியுள்ளனர்.

அதிகாலை இரண்டு மணிக்கு இந்தச் சம்பவம் நடந்துள்ளது. ஓட்டமாவடியில் அமைந்துள்ள ஹோட்டலை இலக்கு வைத்தே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிசார் மேற்கொள் கின்றனர்.

தலைநகரில் தகவல் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கும் நிறுவனம்

SPECTRUM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY

# யாழ். மண்ணில் புதிய உதயம்

SPECTRUM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY

VISHVA GNANA KENDRAM

உலக அறிவியல் நிலையம்

VGK

eSri Lanka
Smart People Smart island

ICTA Information and communication Technology Agency of Sri Lanka

யாழ். நகரின் மையப்பகுதியில் உலக அறிவியல் நிலையம் **(VGK)** ஆனது சகல தொழில்நுட்ப வசதிகளையும் உள்ளடக்கி அமைந்துள்ளது. இது இலங்கை அரசாங்கத்தின் *eSri Lanka* திட்டத்தின் கீழ் **ICTA,** உடன் இணைந்து நவீன உபகரணங்களுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப மையத்தை ஆரம்பித்துள்ளது. அத்துடன் உயர் தகைமை கொண்ட கணனிக் கற்கை நெறிகளையும், ஆங்கிலக் கற்கை நெறிகளையும் ஆரம்பித்துள்ளதுடன் யாழ். நகரில் முதன் முறையாக, வீடியோ மாநாடு (Video Conferencing) எனும் அதீத தொழில் நுட்பத்தையும் நிறுவியுள்ளது.

**Video Conferencing, E-mail & Internet, Photocopying, Local & IDD Calls, Scanning Book Binding, CD Burning.**

போன்ற பொதுச் சேவைகளுடன் தகவல் தொழில் நுட்ப கணனிக் கற்கை நெறிகளையும், புலமைப்பரிசில், புலமைப்பரிசில் அல்லாத வெளிநாட்டுப் பல்கலைக்கழக அனுமதிகளையும் (சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா) யாழ். மக்களுக்குப் பெற்றுத்தருகின்றது.

## திங்கள் முதல்

## புதிய வகுப்புகள் ஆரம்பம்

**Diploma Programs**

- Diploma In.Ms Office
- Diploma In Web Programing
- Diploma In Ms SQL Programing
- Software Development
- Diploma In English

**Degree Programs**

- Bio Informatics (B.Sc., M.Sc)
- Bio Technology (B.Sc.,P.G.D, M.sc)

## Professional Certification

- Microsoft Certified Systems Administrator (MCSA)
- Microsoft Certified Systems Engineer (MCSE)
- Microsoft Certified Application Developer (MCAD)
- Microsoft Certified Solution Developer (MCSD)
- Oracle Certified Professional (OCP)
- Red Hat Certified Engineer (RHCE)
- Cisco Certified NetWork Associate (CCNA)
- Cisco Certified Network Professional (CCNP)

**அரச அங்கீகாரம்.**

*eSri Lanka*என்னும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாண்மை மூலம் அரசாங்க சேவைகளையும், கல்வி நெறிகளையும், நாடு முழுவதும் வழங்கும் பாரிய திட்டத்தின் முன்னோடி செயற்திட்டத்தை யாழ். நகரில் ஆரம்பிப்பதற்கு **Spectrum Institute of Science & technology** க்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**SPECTRUM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY**

SPECTRUM
HUMAN CAPITAL DEVELOPMENT

**BRANCH OFFICE**
711,K.K.S Road,
Jaffna,
Tel : 0212226188
E-mail :vgkjaffna@spectrum.lk

**HEAD OFFICE**
39, Level, 4, Alfred Place,
Colombo -03,
Tel : 2370820,
E-mail: spectrum@vinet.lk

(சி-10152)

# "பொடோ" வழக்கை வாபஸ் பெறுமாறு கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனு தள்ளுபடி

**– விந்தையான தீர்ப்பென்கின்றனர் வை.கோ தரப்பு சட்டவாளர்கள்**

(சென்னை)

வை.கோ உள்ளிட்ட ஒன்பது பேர் மீதான பொடோ சட்ட வழக்கை வாபஸ் பெறுமாறு கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனுவில் தெளிவான காரணம் இல்லை என்று கூறி பூந்தமல்லி நீதிமன்ற நீதிபதி தள்ளுபடி செய்துள்ளார்.

மதுரையை அடுத்த திருமங்கலத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு நடந்த பொதுக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதாக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ உட்பட ஒன்பது பேர் மீது பொடோ சட்டத்தின் கீழ் தமிழக அரசு வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட வை.கோ உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டார்கள்.

இதற்கிடையே பொடோ வழக்குகளை மறு ஆய்வு செய்ய மத்தியரசு நீதிபதி சகாரியா தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. இந்தக் குழு வை.கோ உள்ளிட்ட ஒன்பது பேர் மீது பொடோ சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்தது தவறு. அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று தமிழக அரசுக்கு கடந்த ஏப்ரல் மாதம் பரிந்துரை செய்தது.

இந்தப் பரிந்துரையை ஏற்று வழக்கை வாபஸ் பெற ஜெயலலிதா அரசு தயங்கியது. பின்னர் ஒரு வழியாக வை.கோ உள்ளிட்ட ஒன்பது பேர் மீதான பொடோ வழக்கை வாபஸ் பெறுவதாகக் கூறி மனு ஒன்றை கடந்த மாதம் ஒன்பதாம் திகதி பூந்தமல்லி பொடோ நீதிமன்றில் தமிழக அரசு தாக்கல் செய்தது. இந்த மனு மீது நேற்று முன்தினம் தீர்ப்பளிக்கப்படும் என்று கடந்த முதலாம் திகதி பூந்தமல்லி பொடோ நீதிமன்று நீதிபதி இராஜேந்திரன் அறிவித்தார். இதனால் நேற்று முன்தினம் தீர்ப்பை எதிர்பார்த்து ம.தி.மு.க வினர் பலர் பூந்தமல்லி பொடோ நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்தனர்.

பொடோ வழக்கை வாபஸ் பெறக்கோரிதமிழக அரசு தாக்கல் செய்த மனுவை இந்த நீதி மன்றம் தள்ளுபடி செய்கிறது. அரசின் மனுவில் பொடோ வழக்கை ஏன் வாபஸ் பெற வேண்டும் என்பதற்கான காரணங்கள் சரியாகக் கூறப்படவில்லை. மேலும் பொடோ மனு ஆய்வுக்குழுவின் உத்தரவின் பெயரில் தான் அரசு வழக்கை வாபஸ் பெற முன்வந்துள்ளது. வழக்கை வாபஸ் பெற மறு ஆய்வுக்குழு கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. வழக்கின் முழுவிபரங்களையும் தெரிந்துகொள்ளாமல் பொடோ மறுஆய்வுக் குழு வழக்கை வாபஸ் பெறச்சொல்லியுள்ளது. இந்த நீதிமன்றத்தில் நடந்து வந்த வழக்கு விசாரணை சுப்ரீன் நீதிமன்றில் இடைக்காலத் தடை உத்தரவால் நிறுத்தப்பட்டுள்ளது. சுப்ரீன் நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் இந்த வழக்கு விசாரணை தொடரும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த பரபரப்பான தீர்ப்புக் குறித்து வை.கோ தரப்பு சட்டவாளர் தினகரன், தேவதாஸ் ஆகியோர் நீதிமன்ற வளாகத்தில் நிருபர்களிடம் கூறியதாவது; தமிழக அரசு பொடோ வழக்கை வாபஸ் பெறுவதாகக் கொடுத்த மனுவை தள்ளுபடி செய்து இந்த நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு விந்தையாக உள்ளது. இதுவரை எந்தநீதிமன்றத்திலும் வழக்கை வாபஸ் பெறுவதாக அரசு தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ததாக தெரியவில்லை. இந்தத் தீர்ப்பு வேதனைக்குரியது. இது பற்றி வை.கோவுடன் கலந்துபேசி மேல் நடவடிக்கை குறித்து முடிவு செய்வோம் என்றனர்.

# காஷ்மீர் மசூதிக்குள் நுழைந்த தீவிரவாதிகள்

காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டம் சீந்தரா கிராமத்தில் உள்ள ஒரு மசூதிக்குள் நேற்று முன்தினம் மாலை நுழைந்த தீவிரவாதிகள் 2 பெண்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தனர்.

தகவல் கிடைத்ததும் படையினர் அங்கு விரைந்து சென்று கணணீர்ப்புகைக் குண்டுகளை வீசினார்கள். இதைத் தொடர்ந்து அங்கிருந்து தீவிரவாதிகள் தப்பி காட்டுக்குள் ஓடிவிட்டனர். இதன்பின் படையினர் 2 பெண்களையும் மீட்டுள்ளனர்.

**- இந்திய பாகிஸ்தான் நாடுகளின் -**

# வெளியுறவுத்துறை அமைச்சர் மட்ட பேச்சுக்கள் இன்று ஆரம்பம்

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் இன்றும், நாளையும் டில்லியில் நடக்கிறது. இது குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வந்சிங் கடந்த வியாழக்கிழமை எதிர்க் கட்சித் தலைவர் அத்வானியை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில் பிரதமர் மன்மோகன்சிங், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆகியோர் நேற்று முன்தினம் முக்கிய ஆலோசனை நடத்தினர். அப்போது வெளியுறவு அமைச்சர் நட்வந்சிங், முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் யஷ்வந் சிங்கா ஆகியோரும் உடனிருந்தனர். இந்திய-பாகிஸ்தான் பேச்சுவார்த்தையின் போது எல்லையில் தீவிரவாதிகள் ஊடுருவல் அதிகரித்து வருவதைத் தடுத்து நிறுத்துமாறு பாகிஸ்தானிடம் அறிவுறுத்தப்படும் என்றுதெரிகிறது. இது தவிர காஷ்மீர் பிரச்சினை ஈரானில் இருந்து பாகிஸ்தான் வழியாக குழாய் மூலம் இந்தியாவிற்கு கச்சா எண்ணெய்கொண்டு வருவது ஆகியவை குறித்தும் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப் படவிருக்கிறது.


கேள்வி அறிவித்தல்

வலயக்கல்விப்பணிப்பாளர், முல்லைத்தீவு அவர்களால் பின்வரும் வேலைகளுக்கு மூடிய கேள்விகள் இக்ராட்டுடன் பதிவு செய்த தரம் 08, தரம் 07, தகைமையுள்ள கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 250/= வும் கேள்விப்பணமாக 500/= வும் வலயக்கல்விப்பணிமனையில் 20.09.2004 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 03.00 மணிக்கு முன்னர் செலுத்தி கேள்விப்பத்திர ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் அனைத்தும் 23.09.2004 ஆம் திகதி மு.ப 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்விப்பணிமனை, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல் வேண்டும்.

வேலைகள் விபரம்

1) பாடசாலை வகுப்பறை மூடியடைத்தல்.

பாடசாலைகளின் விபரம்

1) மு/ பாரதி வித்தியாலயம், விசுவமடு.
2) மு/ இரணைப்பாலை றோ.க.த.க.பாடசாலை.
3) மு/ ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை.
4) மு/ கலைமகள் வித்தியாலயம்.
5) மு/ தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை

ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனி கேள்விப்பத்திரம் வழங்கப்படும். அந்தந்தப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கங்களும் விரும்பின் கேள்விப்பத்திரங்களைப் பெற்று கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தக்காரர் வேலைக்குரிய பிணைப் பணத்தை காசாக வலயக்கல்விப்பணிமனையில் 30.09.2004 ஆம் திகதிக்கு முன் செலுத்தி உரிய ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களை காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

வலயக்கல்விப்பணிமனை,
முல்லைத்தீவு.

த.குருகுலராசா,
தலைவர் வலயக்கல்விப்பணிப்பாளர்,கேள்விச்சபை.

(சி.9188)



முல்லை மாவட்டம் – குமாரபுரம்



ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் புனராவர்த்தன
பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக
பெருஞ்சாந்தி விழா.

10.09.2004

மெய்யடியார்களே,

கிரியை ஆரம்பம் – ஆவணித்திங்கள் 21 ஆம் நாள் 06.09.2004 திங்கள் காலை 07.05 முதல் ஆரம்பம்.

யாகாரம்பம் – ஆவணித்திங்கள் 23 ஆம் நாள் 08.09.2004 புதன் எண்ணைக்காப்பு.
ஆவணித்திங்கள் 24ஆம் நாள் 09.09.2004 வியாழன் காலை 07.00 மணிமுதல் மாலை 07.00 மணிவரை மகாகும்பாபிஷேகம்.
ஆவணித்திங்கள் 25ஆம் நாள் 10.09.2004 வெள்ளி மகாகும்பாபிஷேகம்.

சுபமஸ்து

அடியார்கள் அனைவரும் வருகை தந்து முருகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

ஆலய பரிபாலன சபை,
குமாரபுரம், முள்ளியவளை.

(5022)



மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய
கட்டடத் திறப்பு விழா
அழைப்பிதழ்

காலம் : 06.09.2004 மு.ப 11.00

மேற்படி நிகழ்வில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளைக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(சி.10211)

# ஹர்பஜன் சிங் எம்மை அச்சுறுத்திய போதும் போராடினோம், வென்றோம் என்கிறார் வோகன்

இங்கிலாந்தில் நடைபெறும் நட்வெஸ்ட் கிண்ணத்திற்கான இந்தியாவுடனான மூன்று ஒருநாள்போட்டிகளை 2-0 என்ற ரீதியில் தொடரை வென்றதன் மூலம் இங்கிலாந்து அணித்தலைவர் இங்கிலாந்து வீரர்களைப் பாராட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இந்தியாவுக்கு எதிரான போட்டி பற்றி அணித்தலைவர் மைககல்வோகன் தெரிவிக்கும் போது, முதலாவதாக துடுப்பெடுத்தாடிய அனேக மானபோட்டிகள் வெல்லமுடியாமல் போயிருந்தாலும் இப்போட்டியில் தனது வீரர்கள் கடுமையாக உழைத்தார்கள் என்றார். இப் போட்டியில் இரண்டு விக்கெட்டுகளை விரைவாக இழந்தாலும் அடுத்து வந்த வீரர்கள் தாக்குதலைத் தொடர்ந்ததாகத் தெரிவித்தார்.

இப்போட்டியில் 99 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட நாயகன் விருதை வென்ற பிளின்டொப் மற்றும் கொலிங்வூட் ஆகியோரின் ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்ததாகத் தெரி வித்துள்ளார்.

முதலில் ஹர்பஜன் சிங் எம்மை அச்சுறுத்தியபோதும் நாம் அஞ்சாமல் போராடினோம் என்றார்.


இதுபற்றி இந்திய அணித்தலைவர் கங்குலி குறிப்பிடும் போது தனது அணி இரண்டு போட்டிகளிலும் இங்கிலாந்து அணியால் துவம்சம் செய்யப்பட்டதை ஒப்புக் கொள்வதாகத் தெரிவித்ததுடன் இப்போது



எமக்கு சாதகமான வெற்றி கிடைக்கவில்லை என்றார். சுழல்பந்து வீச்சாளர்கள் திறமையை வெளிப்படுத்தினாலும், துடுப்பாட்ட வரிசை பிரகாசிக்கத் தவறிவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

## டெண்டுல்கர் பங்கேற்பது சந்தேகம்

— கங்குலி



இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் ஐ.சி.சி கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளமாட்டார் என கூறப்படுகிறது. அவரது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் குணமாகாததை அடுத்து இபபோட்டித் தொடரில் பங்கேற்பது சந்தேகமே என அணித்தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

எனினும் இன்று நடைபெறும் உடற்தகுதிப் பரீட்சையின் பின்னர் இறுதிமுடிவு எடுககப்படும். டெண்டுல்கர் 339 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 13,415 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரின் சராசரி 45.

இந்தியாவில் நடத்தப்பட்ட உடற்தகுதி தேர்வில் அவருக்குப் பிரச்சினையில்லாதிருந்த போதும் நெதர்லாந்து போட்டிகளின் போது அவரின் உடற்தகுதி குறைவாகக் காணப்பட்டது. பின்னரும் அவர் ஓய்வில் இருக்குமாறு ஆலோசனை கூறப்பட்டது. ஐ.சி.சி கிண்ணத் தொடரின் முதலாவது போட்டியில் வீரும் சனியன்று இந்தியா கென்யாவை எதிர்த்து விளையாடும்.

## விளையாட்டு

## இந்தியா பங்கேற்கும் டெஸ்ட் தொடர்கள் ஒக்ரோபர்- நவம்பரில் ஆரம்பம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியாவில் டெஸ்ட் தொடர் ஒன்றில் பங்கேற்க வரவிருக்கிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி B.C.C.I தலைவர் அணியுடனான 3நாள் போட்டியில் பங்கேற்பதுடன் 4டெஸ்ட் போட்டிகளில் விளையாடும். டெஸ்ட் போட்டி விபரம் ஒக்ரோபர் 6-10 முதல் டெஸ்ட் (பெங்களூர்), ஒக்ரோபர்14-18 இரண்டாவது டெஸ்ட் (சென்னை),ஒக்ரோபர் 26-30 மூன்றாவது டெஸ்ட் (நாக்பூர்), நவம்பர் 3-7 நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் (மும்பாய்) இப்போட்டித் தொடர் முடிந்ததும் இந்திய அணி தென்னாபிரிக்க அணியுடன். 2டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றும் அதன்படி முதலாவது டெஸ்ட் நவம்பர் 20 முதல் 24 வரை கான்பூரிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி நவம்பர் 28 முதல் டிசம்பர் 2வரை கொல்கொத்தாவிலும் நடைபெறும்

## மேற்கிந்தியத் தீவின் சகல்துறை வீரர் வெய்ன் ஸ்மித்தும் அணியிலிருந்து நீக்கம்



ஐ.சி.சி மினி உலகக் கிண்ண தொடருக்கான மேற்கிந்திய தீவு அணியிலிருந்து காயம் காரணமாக வெய்ன் ஸ்மித் நீக்கப்பட்டுள்ளார். மேற்கிந்திய தீவுஅணியில் கடந்த சிலமாதங்களாகவே அணியின் முக்கிய வீரர்கள் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றனர். வரும் 10 ஆம் திகதி இங்கிலாந்தில் சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது. இதற்கான அணியில் இருந்து ஏற்கனவே ரிட்லி ஜேக்கப்ஸ், ஜெர்மைன் லாசன் ஆகியோர் காயம் காரணமாக நீக்கப்பட்டுள்ளனர். இந்தப் பட்டியலில் சகலதுறை வீரர் வெய்ன் ஸ்மித்தும் இணைந்துள்ளார். இவருக்கு வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் மாற்று வீரரை அனுமதிக்கும்படி ஐ.சி.சி யை மேற்கிந்திய தீவு கிரிக்கெட்சபை கேட்டுக்கொண்டது. இதற்கு ஐ.சி.சி.யின் அனுமதி கிடைக்கவே தற்போது ஸ்மித்துக்குப் பதிலாக ரியான் ஹிண்ட்ஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## திடீரென ஏற்பட்ட காயம் எனது திட்டங்களைத் தகர்த்து விட்டது

### மனம் வருந்துகிறார் சச்சின்




“கையில் ஏற்பட்ட காயம் கடுமையாக வலிக்கிறது. எனது வாழ்க்கையில் இப்படியொரு பயங்கர வலியை அனுபவித்ததே இல்லை” என்று வேதனைப்படுகிறார் சச்சின்.

இந்திய அணியின் மாஸ்டர் பேட்ஸ் மேனான சச்சினுக்கு இடது முழங்கையில் காயம் (டென்னிஸ் எல்போ) ஏற்பட்டது. இதையடுத்து இவர் இங்கிலாந்துக்கு எதிரான நட்வெஸ்ட் தொடரில் பங்கேற்க இயலவில்லை. 1989 இல் கிரிக்கெட் அரங்கில் காலடி எடுத்துவைத்த சச்சின் அனைத்துப்போட்டிகளிலும் தவறாமல் பங்கேற்பார். இது போன்ற காயங்களால் எப்போதாவதுதான் பாதிக்கப்படுவார்.

இவர் இல்லாதது அடுத்து நடக்கவுள்ள சம்பியன்ஸ் டிராபிக் (மினிஉலகக்கோப்பை) இந்திய அணிக்கு பெரும் பிரச்சினையாக அமையக்கூடும். இத்தொடருக்கான உடல்தகுதித் தேர்வு வரும் ஐந்தில் நடக்கிறது. இதில் தேறினால் மட்டுமே சச்சின் இந்திய அணியில் இடம்பெற முடியும். இந் நிலையில் நேற்று தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த சச்சின் தனக்கு கைவலி அதிகமாக இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்திய அணிவீரர்கள் அடிப்படை விதிகளைப் பின்பற்றிச் செயற்பட்டாலே வெற்றிமுகத்தை கண்டு கொள்ளலாம் என்றும் கூறினார். இவர் மேலும் கூறியதாவது; மும்பையை விட்டு பல்வேறு கனவுகளுடன் புறப்பட்டேன். ஆனால் திடீரெனக் காயம் ஏற்பட்டது. எனது திட்டங்களையெல்லாம் தகர்த்து விட்டது நெதர்லாந்துத் தொடரின் போது இடது முழங்கையில் காயம் ஏற்பட்டது. எப்படி ஏற்பட்டது என்றே தெரியவில்லை. மிகவும் வித்தியாசமான காயம் என்றே கூறவேண்டும் வலிஅதிகமாக உள்ளது. எனது வாழ்வில் இப்படியொரு கடுமையான வலியை அனுபவித்ததில்லை.

## தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சம்; சம்பியன் ஹொக்கியில் பங்கேற்காது அவுஸ்.

தீவிரவாதிகள் தாக்குதல் அச்சம் காரணமாக பாகிஸ்தானில் வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள சம்பியன் கோப்பை ஹொக்கிப் போட்டியில் பங்கேற்பது குறித்து அவுஸ்திரேலியா கவலை தெரிவித்துள்ளது.



தென்அயர்லாந்திற்கு எதிரான போட்டியொன்றில் போலந்தின் மகீஜ் சுராவ்ஸ்கி கோல் ஒன்றை அடித்ததைக் கொண்டாடும் போலந்து வீரர்கள். நேற்று அயர் லாந்தின் வின்சர் பார்க்கில் நடந்த உலகக் கோப்பை தகுதி காண் போட்டியில் இது நிகழ்ந்தது.

இதனால் அப்போட்டியில் பங்கேற்காமலும் போகலாம் என அணி வீரர் நாதன் எலின்டன் வெள்ளிக்கிழமை கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே போட்டியின் போது மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு முறைகள் குறித்து அமைப்புக்குழுவிடம் அறிக்கை கேட்டுள்ளோம் என ஹொக்கி அவுஸ்திரேலியா முதன்மைச் செயலதிகாரி லிண்டன் அடாம்சன் கூறியுள்ளார்.

தீவிரவாதிகள் தாக்குதல் காரணமாக பாகிஸ்தான் செல்ல வேண்டிய முக்கியத்துவமற்ற பயணங்களை தவிர்க்குமாறு அவுஸதிரேலிய அரசு கடந்த மாதம் அந்நாட்டினரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற அவுஸ்திரேலிய அணி, 27 ஆண்டு கால சம்பியன் கோப்பை வரலாற்றில் ஒரு முறையும் பங்கேற்காமல் இருந்தது கிடையாது.

## பாகிஸ்தான் அணி இம் முறை எமக்கு மிகுந்த சவாலாக அமையும்

### –ரிக்கிபொண்டிங்



அவுஸ்திரேலிய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான போட்டிகளில் விறுவிறுப்புத் தன்மை அதிகமாகக் காணப்படும் என தான் நம்புவதாக அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐ.சி.சி கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் 1990 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப்போட்டி நடைபெற்ற போட்ஸ் மைதானத்தில் அதே அணிகள் இரண்டும் மோதுகின்றமை மற்றொரு சிறப்பம்சமாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நெதர்லாந்தில் நடைபெற்ற மும்முனை கிரிக்கெட் தொடரில் சிறப்பாக விளையாடிய பாகிஸ்தான் அணி இம் முறை எமக்கு மிகுந்த சவாலாக அமையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விசேடமாக பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்துறை பலமடைந்துள்ளமையையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.


இதேவேளை ஐ.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்கான அவுஸ்திரேலிய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிக்கிபொண்டிங் (தலைவர்) மத்யூஹெய்டன், பிரட்ஹாடின், ட்ரன்லீமன், டேமியன்மாட்டீன், மைக்கல்கிளாக், அன்ரூசைமன், மைஹோட், சேன்ஒட்சன், கிளஸ்பி, மைக்கல்கஸ்பரோவிச், பிரெட்லீ, கிளன் மெக்ராத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## பாகிஸ்தானில் நடைபெறும் மும்முனைத்தொடர் போட்டி அட்டவணை வெளியானது

இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதலாவது போட்டி ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி முதல பைசலாபாத்தில் நடைபெறும்.

இரண்டாவது போட்டி ஒக்ரோபர் 28ஆம் திகதி தொடக்கம் கராச்சியில் நடைபெறும்.போட்டி நடைபெறவுள்ள இடத்தில் ஒன்று பாதுகாப்பு அச்சுறுத்தலால் சுற்றுலா அணிகளால் மறுக்கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இதற்கு முன் அம் மாதத்தின் முற்பகுதில் சிறிலங்காவிறகும், சிம்பாப்வேயிற்கும் எதிரான முக்கோண ஒரு நாள் தொடருக்கான திகதிகள் பாகிஸ்தான் கிரிக்கெட் அதிகாரிகளால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு போட்டி கராச்சியில் நடாத்தத் திட்டமிடபட்டுள்ளது. இதனால் சிறிலங்காவோ அல்லது சிம்பாபவேயோ வருத்தம் தெரிவிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட சபைப் பேச்சாளர் அப்பாஸ் சைடி தெரிவித்துள்ளார். முக்கோணத் தொடர்கள் செப்ரெம்பர்-30 பாகிஸ்தான் எதிர் சிம்பாப்வே, முல்ரனிலும், ஒக்ரோபர்-3 பாகிஸ்தான எதிர் சிம்பாப்வே பெஸ்கவரிலும், ஒக்ரோபர் 6-பாகிஸ்தான் எதிர் சிறிலங்கா, கராச்சியிலும் ஒக்ரோபர்-9 சிறிலங்கா எதிர் சிம்பாப்வே, ராவல் பிண்டியிலும் ஒக்ரோபர்-11 சிறிலங்கா எதிர் சிம்பாப்வே,ராவல் பிண்டியிலும், ஒக்டோபர்-14 பாகிஸ்தான் எதிர் சிறிலங்கா லாகூரிலும், ஒக்ரோபர் 16 லாகூரிலும் இறுதிப்போட்டி லாகூரிலும் நடைபெறவுள்ளன.



**சிந்தனைக்கு**

போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்ய வேண்டும்

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## எதிர்பார்த்ததே

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிபந்தனையற்ற ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது. சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும், அபிவிருத்திப் பணிகளைத் தடையின்றி மேற்கொள்வதற்காகவும் அரசாங்கத்திற்குப் பூரண ஆதரவை வழங்கத் தீர்மானித்திருப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தமது ஆதரவிற்கான விளக்கத்தை அளித்துள்ளார்.

இ.தொ.காவின் முடிவு-சிறப்பாகக் கூறுவதானால் அமைச்சர் தொண்டமானின் இம் முடிவானது எவருக்குமே ஆச்சரியமளிக்கும் ஒன்றில்லை. எதிர்பார்க்கப்பட்டதொன்று, நிறைவேறியுள்ளது என்பது மட்டுமே இதில் உள்ளதொன்று.

ஆறுமுகம் தொண்டமான் அரசாங்கத்துடன் இணைவதற்காக நீண்ட பேரத்தில் ஈடுபட்டிருந்தார் என்பதும், அரசாங்கத்துடன் இணைவதற்காக ஆடிமாதம் முடியும் வரை காத்திருந்தார் என்பதும் ஏற்கனவே வெளியாகியிருந்த தகவல்கள். ஆகையினால் தொண்டமான் தற்பொழுது பேரங்கள் முடிவற்ற நிலையிலும், ஆடிமாதம் முடிவுற்ற நிலையிலும் அரசாங்கத்துடன் இணையும் முடிவை அறிவித்துள்ளார் என்றே கொள்ளலாம்.

ஆறுமுகம் தொண்டமானின் இவ் அறிவிப்பினால் தென்னிலங்கை அரசியலில் சிறிது மாற்றம் ஏற்படலாம். அதாவது அரசாங்கம் பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றுவிட முடியும். இதன் காரணமாக ஆட்சிக்குவந்து ஐந்து மாதங்கள் வரையில் சிறுபான்மை அரசாங்கமாக -பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் இருந்த நிலைமாற்றமடையக்கூடும்.

இதேவேளை, வெளியில் இருந்து அரசாங்கத்தை ஆதரிக்கப் போவதாகவே இ.தொ.க.அறிவித்திருப்பினும் அமைச்சுப் பதவிகள் எதுவும் வழங்க அரசாங்கம் தயாராக இல்லாத நிலையில் ஆறுமுகம் தொண்டமான் இத்தகையதொரு முடிவிற்கு வந்திருப்பார் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆகையினால், எதிர்காலத்தில் அமைச்சரவை விஸ்தரிக்கப்படும் என்றே எதிர்பார்க்கலாம்.

இதனைத் தவிர பெரும் மாற்றம் எதுவும் சிறிலங்கா அரசியலில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. சிலவேளைகளில் ஆளும் தரப்பின் வன்முறைகள் பாராளுமன்றத்தில் அதிகரிக்கக்கூடும். இதனைத்தவிர ஆறுமுகம் தொண்டமான் ஆதரவிற்குத் தெரிவித்துள்ள காரணிகள் எதிலும் முன்னேற்றமோ, மாற்றமோ ஏற்பட்டு விடப்போவதில்லை.

ஏனெனில் அறுதிப்பொரும்பான்மை இல்லாமையோ, ஆறுமுகம் தொண்டமான் அமைச்சராக இல்லாது போவதனாலோ அவை எதுவும் பாதிக்கப்பட்டதாக இல்லை. அதாவது சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கும், அபிவிருத்திப் பணிகளுக்கும் அறுதிப்பொரும்பான்மை இன்மை முட்டுக்கட்டையாக இருந்ததில்லை.

ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிப் பதவி அரசாங்கத் தரப்பிடமே உள்ளது. அத்தோடு, எதிர்க்கட்சி வரிசையில் இருந்து சமாதான முயற்சிகளுக்கு எதிராகவோ அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாறானதாகவோ, பெரும் முட்டுக்கட்டைகள் போடப்படவில்லை. மாறாக, அரசிற்குப் பூரண ஆதரவு தருவதாகக் கூறிவருகின்றனர். ஜாதிகஹெல உறுமய சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் சில வேளைகளில் குரல் எழுப்பினும் அது பாதிப்பை விளைவிக்கும் அளவிலிருந்ததில்லை.

இதற்கும் அப்பால், இ.தொ.காவின் ஆதரவானது ஆளும் கூட்டணி அரசாங்கத்திற்குள் காணப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்களை ஓரம்தள்ளவோ வலுவிழக்கச் செய்வதற்கோ வாய்ப்பும் இல்லை. குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதானால் இ.தொ.காவின் ஆதரவால் ஜே.வி.பி க்கு எதிரான நிலைப்பாடு எதையும் சனாதிபதியால் எடுத்துவிட முடியாது.ஆகையினால் ஆறுமுகம் தொண்டமானின் தீர்மானமானது நாட்டிற்கோ, மக்களிற்கோ ஏதும் நன்மை பயக்குமா? என்பது கேள்விக்குரியதொன்று. ஆனால், இவ் ஆதரவால் ஆறுமுகம் தொண்டமானுக்கும் சிலருக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கப் பெறலாம். அவருக்கு நன்மை பயக்கக்கூடும். மாறாக மக்களுக்குப் பயன்தருமா என்பதைத் பொறுத்திருந்துதான் பாத்தல் வேண்டும்.

# வேதனஉயர்வு தொடர்பான ஒப்பந்தம் ஏற்படின் விபரங்கள் தோட்டத்தொழிலாளர்களுக்கு அறிவிக்க வேண்டும்

## தொழிற் சங்கங்களின் சந்திப்பில் வலியுறுத்து

தோட்டத் தொழிலாளர் வேதன உயர்வு தொடர்பாக தோட்ட நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்கின்ற போது அதில் கூறப்படுகின்ற விடயம் குறித்து தோட்ட தொழிலாளர்களுக்கும் சகல தொழிற்சங்கங்களுக்கும் தெளிவு படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

கண்டியில் அமைந்துள்ள விருந்தகம் ஒன்றில் நேற்று நடைபெற்ற தொழிற்சங்கங்களின் சந்திப்பு ஒன்றின் போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்தச் சந்திப்பில் தோட்டத் துறையை சேர்ந்த 10 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் பங்கேற்றதாக பாராளுமன்ற உறுப்பினர் பி. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். ஜே. வி. பி எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வையும் வலியுறுத்தப் போவதாகக் கூறியுள்ளது.

அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸினரும் தோட்ட தொழிலாளர்களின் வேதன உயர்வை வலியுறுத்தப்போவதாகத் தெரிவித்துள்ள மையையும் நேற்றை சந்திப்பில் பங்கேற்ற தொழிற்சங்கங்கள் வரவேற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பாகிஸ்தானிலிருந்து 50ஆயிரம் தொன் அரிசி இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அரிசியின் உள்ளூர்விலையை தற்காலிகமாக நிலைப்படுத்துவதற்காக பாகிஸ்தானிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் வர்த்தக, வாணிப நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இதனைத் தெரிவித்துள்ளார். இதன்படி அடுத்த வாரம் சுமார் ஐம்பதாயிரம் தொன்கள் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் நெல் உற்பத்திச்சபைத் தலைவர் மொகமட் அன்வர் மயனூருடன் சென்ற செவ்வாய் அமைச்சர் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இத்தீர்மானம் எடுக்கப் பட்டதாக ''டெய்லி நியூஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது.

## -------- இணையத்தள கேபிளை சேதப்படுத்திய

# கப்பலை விடுவிப்பது குறித்து ரெலிக்கொம்-அரசாங்கம் முரண்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் சர்வதேச இணைப்புக்களுக்கான கேபிள்களை இலங்கை கடற்பரப்பில் சேதப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள கப்பலை விடுப்பது குறித்து சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கும், தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சிற்கும் இடையே சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இந்தக் கப்பலை விடுவிப்பதற்கான காரணங்களை கூறி சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக அமைச்சர் டி.எம் ஜெயரட்ண தெரிவித்துள்ளார். இந்த விபத்தின் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் கேள்வியெழுப்பியுள்ளார். சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு ஏற்பவே தாம் அந்தக் கப்பலை விடுவித்ததாக இலங்கை கடற்படையின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். கடந்த மாதம் 30ஆம் திகதி சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் இந்தக் கப்பல் நிறுவனத்திற்கு எதிராக தாக்கல் செய்திருந்த வழக்கை வாபஸ் பெற்றிருந்தது. எனினும் எதிர்காலத்தில் மாற்று வகையிலான சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமையுடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். சர்வதேச இணைப்பு கேபிள் சேதமடைந்தமைக்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பலே காரணம் என்று இதுவரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட சிங்கப்பூர் கப்பலின் முழுமையான அறிக்கை வெளியிடுவதற்கு மேலும் மூன்று மாதங்கள் செல்லும் என்று சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே தொடர்ந்தும் மூன்று மாதங்களுக்கு இந்தக் கப்பலைத் தடுத்து வைத்திருப்பதால் ஏற்படும் சிக்கலை தவிர்ப்பதற்காகவே கப்பலை விடுவித்ததாக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தக் கேபிளின் திருத்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதால் தடைப்பட்டிருந்த சிறிலங்கா ரெலிக்கொம்மின் இணையச் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

## -நிலுவைப் பணம் செலுத்தவில்லை-

# கொழும்பு தீயணைக்கும் படைக்கு மின்விநியோகம் துண்டிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் செலுத்தாததால் கொழும்பு தீயணைப்புப் படைக்கான மின்விநியோகத்தை இலங்கை மின்சாரசபை துண்டித்துள்ளது.

இரண்டு இலட்சம் ரூபா நிலுவைத்தொகை இன்னமும் தீயணைப்புப் படையினால் சபைக்குச் செலுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதுகுறித்து தீயணைப்புப் படையின் பிரதம அலுவலர் கன்னங்கரா தகவல் தருகையில்,

1996முதல் 2001 யூலை வரையான காலப்பகுதியில் தீயணைப்புப் படை விமானப் படையின் கீழ் வந்ததில் இருந்து மின்கட்டணம் ஒழுங்காகச் செலுத்தப்படவில்லையென்றும் பெரியதொகை நிலுவையாக இருந்தது என்றும் கூறியுள்ளதுடன், 2001 யூலையில் விமானப் படையிடமிருந்து தீயணைப்புப் படை மாற்றப்பட்ட பின் மின் கட்டணம் ஒழுங்காகச் செலுத்தப்பட்டு வந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் நேற்று முன்தினம் காலையில் இருந்து மின் விநியோகம் நிறுத்தப்பட்டிருப்பதால் பல சிரமங்கள் எதிர் நோக்கப்படுவதாகவும், இது விடயம் குறித்து இலங்கை மின்சார சபையினருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அந்த அலுவலர் தெரிவித்திருப்பதாக "டெய்லிமிரர்" ஆங்கில நாளிதழ் செய்திவெளியிட்டுள்ளது.

# இந்தியக் கடற்படை தலைமை அதிகாரி அடுத்த வாரம் இலங்கை வருகின்றார்



இந்தியக் கடற்படைத் தலைமை அதிகாரி அட்மிரல் அருண் பிரகாஸ் அடுத்த வார முடிவில் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் இம் மாதம் 12ஆம் திகதியளவில் இங்கு வருகை தருவார் எனஎதிர்பார்க்கப்படுகின்றது என அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவரின் வருகைக்கான மேலதிக விபரங்கள் வெளியிடப்படவில்லை. அருண் பிரகாஸ் கடந்த யூலை 30இல் மத்வேந்திரசிங்கிடம் இருந்து நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார்.



# இன்றைய நிலைமையைப் பயன்படுத்தி கல்வித்தரத்தை உயர்த்தவேண்டும்

## புதுக்குளம் ம.வி.கட்டடத்திறப்பு விழாவில் ஞானம்

(செட்டிகுளம்)

"இன்று நாட்டில் இருக்கின்ற சூழ்நிலையைப் பாவித்து எமது மாணவர்களின் கல்வித்தரத்தினை அவர்கள் உயர்த்திக்கொள்ள வேண்டும். இதற்கு அனைவரும் சேர்ந்து செயற்படுவது மிகமுக்கியமான ஒன்று" இவ்வாறு தமிழீழ கல்விக்கழக வவுனியா மாவட்ட பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் மூன்று மாடி கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த போர்க்காலத்தில் இராணுவத்தாலும் அரசாங்கத்தாலும் திட்டமிட்டு வவுனியா வடக்கு வலயத்தின் பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டன. அதன் பின்னர் திணைக்களங்களின் அசமந்த நிலைமை காரணமாக பாடசாலைகள் திருத்துவதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. எனினும் கடந்த இரண்டு வருட காலத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே இன்று இருக்கின்ற மாணவர்கள் இதனை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

நிகொட் திட்டத்தின் கீழ் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்திற்கு மூன்று மாடிக் கட்டடம் கட்டி கொடுக்கப்பட்டது. இதனை திறக்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் கலந்து கொண்டார் விசேட பிரதிநிதிகளாக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சிங்காரவேல் தண்டாயுதபாணி நிகோட் திட்ட பொறியியலாளர் கமலநாத சர்மா, வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் தமிழீழ கல்வி கழகத்தின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் ஞானம் மற்றும் கல்வித் திணைக்களத்தினைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டார்கள். நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கட்டடத்திற்கான நாடாவை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெட்டித் திறந்து வைத்தார் தொடர்ந்துபெயர்ப்பலகையை வவுனியா மாவட்ட அரச அதிபர் திரை நீக்கம் செய்து வைத்தார் தொடர்ந்து பாடசாலை அதிபர் தாமோதரம் அமிர்தலிங்கம் தலைமையில் இந்நிகழ்வுகள்இடம்பெற்றன. (02)



படம்:- மகா.

### பேச்சுவார்த்தைகளை....

ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றைக் காண்பது கடினமானதாக இருந்தாலும், அனைத்து சமூகங்களையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். விடுதலைப்புலிகள் மீண்டும் பேச்சுக்களுக்குத் திரும்புவார்கள் என நான் நிச்சயமாக நம்புகிறேன்" என்றும் சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவு குறித்து தனது அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி அவர் கருத்து எதையும் கூறவில்லை.

சமாதான நடவடிக்கையுடன் மட்டுமல்ல எரிபொருள்களின் விலையேற்றம், வரட்சி, வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவற்றுடன் தனது அரசாங்கம் போராடிவருவதாகவும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுற்றுலாத்துறை அமைச்சரும் சனாதிபதியின் சகோதரருமான அநுராபண்டாரநாயக்க உட்பட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அனைத்துத் தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். ஜே.வி.பி.யின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கலந்து கொண்டார்.

### கடற்றொழிலில்...

கடல்மைல் தூரத்தில் மாலை 5.00மணிக்கு மாத்தளனுக்கு நேரே நின்ற சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான டோறாப்படகிலிருந்து வள்ளத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டபோதும், தொழிலாளிகள் கையை உயர்த்திக் கத்திய போதும், குதிக்கும்படி கூறிவிட்டுத் தொடர்ந்து சுட்டுள்ளார்கள். இதனால் வள்ளத்திற்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டு மூழ்கும் நிலையிலும் நேவியால் கடையார் பக்கம் இடித்துச் சேதமாக்கப்பட்டது. அதன் பின்னர் தொழிலாளிகளை வள்ளத்தில் ஏற்றிதிரும்ப உயரத் தொழிலுக்குச் செல்லும்படி வெருட்டிவிட்டுச் சென்றுள்ளார்கள்.அதன பின்னர் தொழிலாளிகள் நீரை வெளியேற்றிக்கொண்டே இரவு10.00மணிக்கு கரை சேர்ந்தார்கள்.

இச்சம்பவத்தைத் தங்களின் தயவான கவனத்திற்கு அறியத் தருவதுடன் இந்நடவடிக்கையானது தற்போது நிலவிவரும் யுத்தநிறுத்தத்தை மீறும் ஒரு செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

20 வருடத்திற்கு மேல் நடைபெற்ற யுத்தத்தில் இழக்கப்பட்ட சொத்துக்களை ஈடுசெய்யும் நோக்கோடு தொழில் உபகரணங்களை அபிவிருத்தி செய்து வருகின்ற இந்த வேளையில் சிறிலங்காவின் கடற்படையினால் எமது மக்கள்மீது கட்டவிழ்த்து வரும் காட்டுமிராண்டித்தனமான இச்செயற்பாட்டிற்குஎமது நாட்டின் பிரச்சினைக்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு 3ஆம் தரப்பினராக வந்திருக்கும் கண்காணிப்புக் குழுவின் தலைவராகிய தாங்கள் ஒரு முடிவைப் பெற்றுத்தருவதுடன் இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் காலத்தில் நடைபெறாதவண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு எமது மீனவ மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். (20)

### போர் அரக்கன்...

யுவதிகளை ஒன்றிணைத்து சமாதானத்தினை வலியுறுத்தி அமைதிப்பேரணி ஒன்று வவுனியாவில் இடம் பெற்றது இந்தப் பேரணியானது வவுனியா றம்பைக்குளம் அந்தோனியார் தேவாலயத்தில் இருந்து ஆரம்பமாகி கண்டி வீதி விகாரைவரை சென்று மீண்டும் வவுனியா நகரினூடாக அந்தோனியார் தேவாலயத்தில் விஷேட ஆராதனையின் பின்னர் முடிவடைந்தது. இந்த நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப், அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் மற்றும் பல கத்தோலிக்க மதகுருக்களும் வவுனியாவினைச் சேர்ந்த சர்வமத பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

காலை விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான வைபவத்தில் 56 பேர் இரத்ததானம் செய்தனர். மாலை இடம் பெற்ற பேரணியில் சுமார் 600இற்கு மேற்பட்ட கத்தோலிக்க மதத்தை சேர்ந்தஇளைஞர்யுவதிகள் கலந்து கொண்டனர். மன்னார் மாவட்ட ஆயர் ஜோசப் பேரணி முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போது அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களும் சமாதானத்தினை அனுபவிக்க வேண்டும். சமாதானமானது நீதியின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும். அப்போது தான் அது சமாதானமாக அமையும். ஆனால் இன்று நாட்டில் இருக்கின்ற நிலைமைகளினைப் பார்க்கின்ற போது பெரிய பயமாக உள்ளது அண்மைய நாட்களாக இடம் பெற்று வரும் கொலைகள் சமாதானத்தினை குலைத்து மீண்டும் ஒரு யுத்தத்திற்கான ஆயத்தமாக இருக்கின்றதா? என்று எண்ணத் தோன்றுகிறது. வீணான அரசியல் இலாபத்திற்காக மீண்டு ஒரு போர் ஏற்பட வேண்டும் என்று தென்னிலங்கையின் சில அரசியல்வாதிகள் முயற்சித்துக்கொண்டு உள்ளனர். இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் இதற்காகவே தான் இன்று இந்த இளைஞர்களுக்கு சமாதானத்தின் தேவையைப் பற்றி உணர்த்தியுள்ளோம் என்று ராயப்பு ஜோசப் மேலும் தெரிவித்தார் இந்த நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர் . (21)

**01.01.1983இற்கும் 01.01.1988இற்கும் இடையில் நீங்கள் பிறந்திருப்பின் கொடிய சின்னமுத்து, ஜேர்மன் சின்னமுத்து நோயிலிருந்து பாதுகாக்க இம்மாதம் 11ஆம் திகதி, 12ஆம் திகதிகளில் உங்கள் வீட்டிற்கு அண்மித்துள்ள விசேட சின்னமுத்து, ருபெல்லா தடுப்பு மருந்தேற்றல் நிலையங்களிற்குச் சென்று தடுப்பு மருந்தேற்றிக் கொள்ளுங்கள்.**

# இனப்பிரச்சினை குறித்து சனாதிபதி பேசட்டும் ஏனையோர் வாயைமூடிக்கொண்டிருப்போம்

## சு.க. மாநாட்டில் அநுரா தெரிவிப்பு

இனப்பிரச்சினை தொடர்பாக அரச தரப்பில் சனாதிபதி மட்டுமே கருத்துக்கூற முடியுமென அமைச்சர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி தலைமையில் காலியில் நேற்று நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 53 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் சிறிலங்காக் கட்சியினருக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். எமக்கு முன்பாக மக்கள் விடுதலை முன்னணி செல்வதாகவும், எம்மைவிட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் ஏற்பாடுகள் செய்வதாகவும் மக்கள் மத்தியில் செல்வதாகவும் எம்மிடம்சிலர் கூறுகின்றனர். நாம் இந்தவிடயம் தொடர்பாக பொறாமைப்பட்டுப் பயனில்லை. மக்கள் விடுதலை முன்னணி அவர்களின் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்வதற்கு அவர்களுக்குப் பூரண உரிமையுள்ளது.நாம் மற்றவர்களைப்பார்த்துப் பொறாமைப்படாது சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பலப்படுத்துவோம்.

சனாதிபதியும் , பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினைச் சேர்ந்தவர்கள் . அத்துடன் அமைச்சரவையில் 90 வீதமானவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினைச்சேர்ந்தவர்கள்.ஏழு மாகாண சபைகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குரியது. ஏன் நாம் ஏனைய கட்சிகளைப் பார்த் துப்பொறாமைப் பட வேண்டும்.எம்மிடமுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதை விட்டு மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதில் பயனில்லை. நான் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன்.

இனப்பிரச்சினை தொடர்பாக நானும் சில சமயங்களில் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளேன். எம்மத்தியிலுள்ள சிலரும் ஒவ்வொரு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். நாம்அனைவரும் இன்று முதல் எமது வாயை மூடிக் கொண்டு இந்த விடயம் குறித்து சனாதிபதி பேசுவதற்கு மட்டும் இடமளிப்போம். விடுதலைப் புலிகளுடன் ஒரு குரலில் பேசாவிட்டால் விடுதலைப் புலிகளுக்குத் தவறான சமிக்கைகள் செல்கின்றன. நாம் ஒவ்வொரு விதமாகக் கூறினால் அவர்கள் அரசாங்கத்திற்குள் பிரச்சினை இருப்பதாகக் கருதுவார்கள். நான் ஜே.வி.பியைப் பற்றிக் கூறவில்லை. அவர்களது நிலைப்பாடு வேறுபட்டது.நான் தற்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பற்றியே பேசுகின்றேன். இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசும் பொறுப்பைத் தயவு செய்து சனாதிபதியிடம் வழங்குவோம். ஏனெனில் அவருக்கு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆணை கிடைத்தது. அவரே அவரது கண்ணை நாட்டின் சமாதானத்திற்காகத் தியாகம் செய்தவர். இதனால் இந்த விடயம் தொடர்பாகப் பேசுவதற் கும் தீர்வு காண்பதற்கும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்குமான பொறுப்பை அவரிடமே வழங்கு வோம் எனவும் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

# பேனா வடிவிலான துப்பாக்கி வைத்திருந்தவர் கைது



குமிழ்முனைப் பேனாவை ஒத்த நவீன ரகத் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த ஒருவரை கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிசார் இன்று கைது செய்துள்ளனர்.

கிரான்ட்பாஸ் பாலத்துறை பகுதியில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். இந்த நவீன ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தக்கூடிய தோட்டாக்களையும் அவரிடமிருந்து கைப்பற்றியுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி றுவான் வெதசிங்க தெரிவித்தார். வனப் பகுதியில் போரிடும் இராணுவ வீரர்கள் பயன்படுத்தும் மிகப் பெறுமதி வாய்ந்த துப்பாக்கி இது என இனம் காணப்பட்டுள்ளது. இதே போன்ற ஒரு துப்பாக்கியை இதற்கு முன்னரும் பொலிசார் கைப்பற்றியிருந்ததாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

### இன்று தமிழின...

பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. கடந்த 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர்5ஆம் திகதி கிழக்குப்பல்கலைக்கழக அகதி முகாமில் இருந்த 158 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இத்தினம் போராட்டக் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிர்நீத்த பொதுமக்களின் ஆத்ம சாந்தி வேண்டி இந்த நாள் துக்க நாளாக அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (32)

### எமதுமக்கள்..

அணுகி உதவிகளைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

இன்றும் எமது மக்கள் பழைமைகளிலேயே நாட்டம் கொண்டுள்ளனர்.அதைவிடுத்து புதுமைகளையும் கையாளப் பழகிக் கொள்ள வேண்டும். இதனூடாக எமது தேசத்தின் பெருமையையும் மதிப்பையும் காப்பது எமது ஒவ்வொருவரதும் கடமை என மேலும் கூறினார்.நேற்றுக்காலை 11.30 மணியவில் ஆரம்பமான இத்திறப்பு விழாவின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் தவராசா அவர்கள் ஏற்றிவைக்க, தொடர்ந்து சங்கத்தின் பிரமுகர்கள் , கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்கள், காவல்துறை உறுப்பினர் ஆகியோரும் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை கடற்புலிகளின் வடமராட்சிக் கிழக்கு பொறுப்பாளர் புகழேந்தி அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து சங்கத்தின் பெயர்ப்பலகையினை கடற்புலிகளின் தளபதி லெப்ரினன்ட் கேணல் மங்களேஸ் அவர்கள் திரைநீக்கம் செய்து வைக்க கட்டடத்தினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து சங்கத்தலைவர் யோகராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் சிறப்புரையினைக் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை அவர்கள் நிகழ்த்த தொடர்ந்து யாழ். மாவட்ட பனை.தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர், தமிழீழ நிர்வாகசேவை கூட்டுறவுப் பொறுப்பாளர் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

இந்நிகழ்வின் திறந்து வைக்கப்பட்ட சங்கத்தின் வளர்ச்சிக்காக கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் அவர்களால் இரண்டு இலட்சம் ரூபா பணமும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச.11)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.